www.tamilarangam.net

# சிந்தனை

மார்கழி 1990



மரணத்தைக் கண்டு
நாம் அஞ்சவில்லை
ஒரு அனாதைப் பிணமாக
ஒரு அடிமையாய்
புதிய எஜமானார்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கிறோம்!

-- செழியன்

SINTHANAI 4/90 DECEMBER 1990

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Editorial

The politics of the past leadership of the Srilankan Tamils had only led them into the refugee camps and protective bunkers. Even though it is said that a group of people get the leaders they deserve, the truth is that the "leadership" is thrust on the majority of the people. But people are ultimately sacrificed for the mistakes of these leadership.

No one believed that the alliance that existed between the Srilankan government and the tigers at the beginning of this year was honest and permanent. But there was no doubt that both sides achieved their selfish motives. They were close friends for eliminating their political rivals and defending each others' crimes. Government ministers tried to coverup the Tigers, in the case of the murders of Messrs. Amirthlingam, Yogesvaran and Sam Thambimuthu. On the otherhand Tigers defended the Srilankan government that was killing thousands of youths at home as a "Government of Purity" in the international forums. The government which gave the Tigers tons of explosives, about 2000 AK47s, hundreds of machine guns and hundred thousands of ammunition for destroying their political opponents is clashing with them today, resulting in the massacre of innocent civilians.

The sad thing today is, the other Tamil organizations repeating the same mistakes as the Tigers. These organizations allying with the very same government , which helped the Tigers to murder their own militants, inorder

(Continued on inside backcover)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



வரலாற்றில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளை ஏற்றவர்களின் அரசியல் இன்று அந்த மக்களை அகதிமுகாம்களிலும், பதுங்கு குழிகளிலும் தஞ்சம் புக வைத்துள்ளது. ஒரு மக்கள் கூட்டம் தமக்குகந்த தலைமைகளையே தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறப்பட்டாலும் பெரும்பான்மையான மக்கள் மீது அரசியல் தலைமைகள் திணிக்கப்படுகின்றன என்பதே உண்மையாக இருக்கின்றது. இந்தத் தலைமைகளின் தவறுகள் எல்லாவற்றிற்கும் பலியாக வேண்டியவர்கள் மக்கள் தான்.

இந்த வருட ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் கூட்டு ஏற்பட்ட பொழுது அது நேர்மையானதும் நிரந்தரமானதுமென்று யாரும் நம்பவில்லை. ஆனால் இரு பகுதியினரும் தமக்குத் தேவையானவற்றைச் சாதித்துக் கொண்டனர் என்பதிலும் சந்தேகமில்லை. எதிர் அரசியல் தலைமைகளை அழிப்பதிலும், ஒருவருக்காக மற்றவர் வக்காலத்து வாங்கி இப்படுகொலைகளை மறைப்பதிலும் அரசும் புலிகளும் உற்ற நண்பர்களாக இருந்தனர். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து ஆகியோருடைய கொலைகளை புலிகள் செய்யவில்லை என அரசாங்க மந்திரிகள் மூடிமறைத்தனர். மறுபுறத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த அரசைப் புனிதமானவரின் ஆட்சி என்று சர்வதேச மன்றங்களில் புலிகள் பாராட்டினார்கள். மாற்று இயக்கங்களை அழிக்க ஏழு(7)தொன் வெடிமருந்துகள், 2000 AK 47, பல நூறு இயந்திரத் துப்பாக்கிகள், இவைக்கான இலட்சக்கணக்கான குண்டுகளையும் புலிகளுக்குக் கொடுத்த அரசு, இன்று அதே புலிஇயக்கத்தை அழிக்கிறோமென்று மக்களை கொன்று கொண்டிருக்கும் வேளையில்...

புலி இயக்கம் செய்த அதே தவறை மற்றைய தமிழ் இயக்கங்கள் சில மேற் கொண்டிருப்பதே வேதனை தரும் விடயமாக இருக்கின்றது. எந்த அரசின் உதவியுடன் புலி இயக்கத்தினர் இந்த இயக்கங்களின் போராளிகளைக் கொன்றார்களோ அதே அரசுடன் கூட்டுச்சேர்ந்து இந்த இயக்கங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் தமது ஆளுமையை நிலைநாட்ட முனைகின்றன! இவர்களின் இன்றைய அரசியல் துரோகம் கடந்தகால பாராளுமன்ற தலைமைகளின் துரோகங்களையும் மிஞ்சிவிட்டன. கடந்த காலத் தமிழ்த்தலைமைகள் சிங்கள முதலாளித்துவ சக்திகளுடன் உறவு கொண்டாடியதையும், மலையக, சிங்கள முற்போக்கு சக்திகளுடன் உறவு வைக்கப் பின் நின்றதையும் அவர்களின் வர்க்க குணாம்ச அடிப்படையில் ஒருவகையில் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

ஆனால் இன்று விடுதலைப் போராட்டத்தை ஆயுதரீதியாக முன்னெடுத்து, முற்போக்குப் பேசிய இயக்கங்களும் அதே வழியில் செல்வதுதான் வேடிக்கையாகவும் வேதனை தரத்தக்கதாகவும் உள்ளது.

www.tamilarangam.net

தமிழ் மக்களின் உரிமைகளை இலங்கை அரசின் ஆயுத உதவியுடனேயோ அல்லது இந்திய அரசின் அனுசரணையுடனோ பெறமுடியாது என்பதை இந்தத் தலைமைகள் உணர வேண்டியது அவசியமாகும்.

இன்று இந்த அரசினால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மலையக மக்களும் சிங்களப் பாட்டாளி மக்களும் தான் எமது உண்மையான தோழமை சக்திகள் என்பதனையும் அவர்களின் அமைப்புகளுடனான ஐக்கிய முன்னணி மூலமாகவே இந்த அரசிற்கெதிரான தீர்க்கமான போராட்டத்தை முன்னெடுக்க முடியுமென்பதையும் இந்த தலைமைகள் உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

சிந்தனை



எதிர்பாராதும், தவிர்க்கமுடியாதவையுமான சில தடங்கல்களினால் **சிந்தனை** மிக தாமதமாகவே உங்கள் கைகளுக்குக் கிடைக்கின்றது. வாசகர்களிடம் மன்னிப்புக் கோருவதுடன் புதிய வருடத்தில் இவிதம் நிகழாது எனவும் உறுதியாக நம்புகின்றோம்.

ஆசிரியர் குழு

SINTHANAI
[illegible]tr.107,
7000 Stuttgart 1.
GERMANY.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்முறையும் மனித உரிமைகளும்

## - ரெஜி சிறிவர்தன

கந்தசாமி நினைவுப் பேருரை - 1989

நியாயவாதியும் நிவாரண, புனருத்தாரணத் தொண்டரும் மனித உரிமைகள் ஆதரவாளரும் ஆகிய க.கந்தசாமி அவர்கள் 19 யூன் 1988 அன்று யாழ்ப்பாணத்தில் கடத்திச் செல்லபட்டதையடுத்துக் கொல்லப்பட்டார் என கருதப்படுகிறது.

'வன்முறையும் மனித உரிமைகளும்' எனப் பெயரிய இப்பேருரை, ரெஜி சிறிவர்தனா அவர்களால், கடத்தலின் முதலாண்டு நிறைவையும், "அகால மரணம் - கந்தசாமியின் நினைவுமலர்" என்ற நூல் வெளியீட்டையும் குறிக்குமுகமாக, கொழும்பில் 1989 யூன் 19இல் ஆற்றப்பட்டது.

கந்தசாமி ஞாபகார்த்த வெளியிட்டுக் குழு அதன் நினைவுமலர் இறுதியில் 'படைவீரன் வரவு பார்த்திருத்தல்'என்ற எனது பாடலை சேர்த்திருப்பதை நான் முதலில் குறிப்பிட வேண்டும். அதனை மலரில் வெளியிட்டுக் கொள்ள விரும்பியதற்குக் காரணம், கந்தசாமியின் பரிதாப முடிவுக்கு சில நாள் முன்னர் அவருக்கு அப் பாடலை யாரோ ஒரு நண்பர் அனுப்பியிருந்தமையாகத் தெரிகிறது. 1987இன் இறுதியில் இந்திய-இலங்கை உடன்படிக்கையால் தூண்டப்பட்ட சமாதான நம்பிக்கைச் சுடர், வன்செயல் மீண்டும் நாட்டில் தலையெடுத்ததன் விளைவாக, மங்கத் தொடங்கிய சமயத்தில் இப்பாடல் புனையப்பட்டது. பாடலின் தொனிப் பொருள் யாதெனில், பொதுமக்கள் உலகத்தை எவ்வாறாயினும் முன்னேறச் செய்யவியலாத நிலையில் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை வெளியுலகிலுள்ள அமைதியின்மையாலும் வன்செயல்களாலும் எந்தக்கணமும் ஒழிக்கப்படலாம் என்ற உணர்வு மீதூரும் நிலையில் அறிவியல் நாட்ட உலகினுள் அடைக்கலம் புகுவதே எவரும் செய்யத்தக்கது என்பதாகும். அப் பாடலின் பொருளை இப்போது நான் குறிப்பிடுவதற்க்குக் காரணம் யாதெனில் நாம் இன்று வாழ்கின்ற இருள் மயமான உலகில் கந்தசாமியின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்ட ஒரு நோக்கத்திற்குச் சான்றாக அமைந்தமையேயாகும். கந்தசாமி அவர்கள் தமது வாழ்க்கைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாகத் தேர்ந்தெடுத்த துறையில் அவர்பால் இயல்பாகவே துலங்கிய வியத்தகு ஆற்றலையும் அபரிமித உழைப்புச் சக்தியையும் பயன்கூர விருத்திசெய்து அதன் மூலம் கிட்டும் அனுகூலத்திலும் திருப்தியிலும் களிப்புற்று வாழ்ந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, அநீதியை எதிர்த்துப் போராடவும் அநீதிக்குப் பலியானார்க்கு உதவவுமென்றே தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார். மானிடத்திற்கும் நியாயத்துக்கும் இழைக்கும் கொடுமையைச் சாடத் தனது முழுச் சக்தியையும் பயன் படுத்தினார். இத்தகைய பரித்தியாகத்தால் தம் வாழ்வையே பலியிட்டார். ஆக்கிமெடீஸின் மரணத்துக்கும் கந்தசாமியின் மறைவுக்கும் உள்ள பொதுவான அம்சம் நாகரிகம் வாய்ந்த நற்பண்புகள்மீது விலங்கியல் பலாத்காரம் வெற்றி கொண்ட கொடூரம்தான். ஆதலால் "படை வீரன்வரவு பார்த்திருத்தல்" என்னும் பாடல் கந்தசாமிக்கு ஏற்புடைய காஞ்சி செய்யுளாகாது. அதற்குப் பதிலாக, அவரது வாழ்வும் மரணமும் பற்றிய எனது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்து விளங்கும் ஆங்கிலக் கவிஞர் டபிளயூ.எச்.ஓடனின் பின்வரும் பாடலடிகளை அவர்க்கமைந்த போற்றரவாகப் புகல்வேன். வெளிக்கொள்ளாமலும் அடக்கமாகவும் மனித வர்க்க ஈடேற்றத்திற்கு அளப்பரியன செய்து புகழாரத்தையும் போற்றலையும் எதிர் கொள்ளாது ஒதுக்கமாக நின்ற இவ்வுத்தமரை நினைத்துப் பார்க்கையில் ஓடனின் ஆடம்பரமற்ற அடிகளே ஏற்புடைத்தாகப்படுகின்றன.

கணம்தோறும் இறப்போர் கணக்கிலராய்
கண்ணீர் அருவி கரைகடந்தோட
சமூகப் பொதுமையாய்ச் சாத்துயர் விளங்கும்
அவல நிலையில் யாரை புகழ்வது யாரைவிடுவது
மக்கள் உயர்வுறு வகையிற் செய்பணி
எல்லையின் றாயினும் எம்மாலியன்றதை
இயற்றவும் யாமென அரும்பணி புரிந்தவாறு
மாயந்து மகான்களும் மறைகின்றனரால்..

இச்சொற்பொழிவையாற்றும்படி கந்தசாமி ஞாபகார்த்தக் குழுவினர் என்னையழைத்த போது "வன்முறையும் மனித உரிமைகளும்" என்னும் தலைப்பில் பேசுவதெனத் தீர்மானித்தேன். தனது சகாக்களான மனித வர்க்கத்தினரின் உரிமைகளைப் பேணுதலை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து, அத்தகைய பணியில் ஈடுபட்டிருந்த காலை வன்முறையால் இறக்க நேர்ந்த ஒரு சான்றோனை நினைவுகூருவதற்குரிய பொருத்தம் நோக்கியே இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். அது மாத்திரமன்றி, அடிப்படை உரிமைகளுள் அதிமுக்கிய உரிமையான வாழ்வு, உரிமை, நாள் தோறும் மீறப்பட்டுவரும் இவ்வேளையில் இதனைவிட முக்கியத்துவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ந்த விடயம் இருக்கமுடியாது என்பதாலும் இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இவ்வுரையின் வடிவப்பாங்கு, நாம் இன்று எதிர் கொள்ளும் சூழ்நிலையின் தன்மையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதெனலாம். இன்று, மனித உரிமைகள் அரசினால், சனநாயகத்தின் பேரில், அல்லது நாட்டின் இறைமையினையும் பாதுகாப்பையும் பேணுதல் என்ற தோரணையில் மீறப்படுகின்றன. மறுதரப்பில், தீவிரவாதக் குழுக்களினால் தேசிய அல்லது சமூக விடுதலையின் பேரில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இங்கே ஒருபுடைச் செயற்பாடுகளை மட்டும் எடுத்துக் கூறி மறுபுடைச் சார்ந்தவற்றைக் கூறாது விடுவது ஏமாற்றத்தை விளைவித்தல் மட்டுமன்றி நேர்மையீனமானதுமாகும். ஆதலின் எனது உரை இருபாகங்களை உடையதாய் விளங்கும் - முதலில் அரச வன்முறையையும் பின்னர் இயக்க வன் முறைகளையும் எடுத்துக் கூற முயல்வேன்.இந்த இரு வகையான வன்முறைகள் பற்றிப் பேசுவதற்கு முன், சில தொடக்க நிலைக் குறிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

இலங்கையில் இன்று காணப்படும் வன்முறைச் செயற்பாட்டுத் தன்மையினை நோக்கிற் கொண்டு இதற்குப் பெரும்பாலும் ஏதுவாயமைந்த சமூக காரணிகளை ஆராய்வதற்கும் அதிகாரம் வழங்கள் என்பனவற்றின் பங்கீட்டின் பொருட்டும், பல்வேறு இன. வர்க்க குழுக்கள்நடத்திய போராட்டத்தை ஆய்வு செய்வதற்கும் இயலும். ஆனால் வன்முறைபற்றிய எனது நோக்கு, இந்த வகையில் அமைவதன்று. எமது சமூகத்தில்பிளவும் பகையுணர்வும் நிலவுதற்குரிய சமூக ஏதுக்கள் யதார்த்தமானவையே. ஆனால் இச் சூழ்நிலைகளும் அவற்றால் எழும் பிரச்சனைகளும், வன்முறைகளாக உருப்பெற்றும் பரந்தும் தொடர்ந்தும் நிலவும் போக்கானது விலக்க முடியாதொன்றல்ல. பிணக்கு அல்லது முரண்பாடு வன்முறையாகப் பரிணமிக்கும். இப் போக்கு அரச நிருவாகப் பொறியைக் கையாளும் தலைவரும், அந் நிருவாகத்துடன் முண்டிக் கொண்டு நிற்கும் அரச விரோத சக்தியினருமாகிய இரு சாரரும் மேற் கொள்ளும் முடிவுகளைப் பொறுத்தமைவது; நாட்டின் பாதுகாப்பைப் பேணுதற்கியன்ற நெறிமுறை யாது என்பதை நிர்ணயிக்கும் அரச தலைவரின் முடிவிலும் அதனை எதிர்பார்ப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு அரச விரோத சக்திகள் நியாயமானதெனக் கருதி மேற் கொள்ளும் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது. இதன் தொடர்பில் அரச சக்தி, அரச விரோத சக்தி ஆகிய இரண்டினுள் ஒன்று மேற்கொள்ளும் முடிபுகள் பெரும்பாலும் மற்றதன் எதிர்ப்புச் செயற்பாட்டினைத் தூண்டுவனவாகஅமைவதுண்டு. சமீப காலத்தில் நமது நாட்டில் இடம் பெற்ற அரச வன்முறைகளும் அரச விரோத வன்முறைகளும் இதற்குச் சான்றுபகர்வன. நமது சமூகத்தில் வன்செயல்களைப் பெருக்கவல்ல அல்லது குறைக்க வல்லதான உணர்வுபூர்வ முடிவுகளை அரசியல்

www.tamilarangam.net

நாடக சூத்திரதாரிகள் மேற் கொள்ளுதற்கிடமாயமைந்த இத்துறைபற்றியே எனது உரை துலக்க முயலும். உணர்வுபூர்வ முடிபுகள் என்று நான் குறிப்பிடுகையில், முடிவு மேற்கொள்பவர் அரசாங்கத் தலைவராயினும் சரி அல்லது தீவிரவாத இயக்கத் தலைவராயினும் சரி தாம் எடுக்கும் முடிவால் ஏற்படத்தக்க விளைவுகளின் தன்மையை அறிந்து செய்கின்றார் என்பது எனது கருத்தன்று: அவரின் முடிபுகள், வேளைக்கேற்ற உடனடித் தேவை நோக்கிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதே எனது கருத்தாகும். ஆனால் அத்தகைய முடிவுகளால் கலாந்தரத்தில் நீண்டகாலத்தக்கவியல்பினதாய் ஏற்படவல்ல விளைவுகளைக் கருத்திற் கொண்டு நோக்குவது வெகு அவசியமாகும். உதாரணத்திற்கு 1956இல் அரசகருமமொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நாளை எடுத்து நோக்குவோம். சிங்களம் மட்டும் என்ற கொள்கை கைக்கொள்ளப்பட்டமையே இலங்கை வரலாற்றுப் போக்கினை மாற்றியமைத்த பாரியதாக்கமிக்க முடிவுகளுள் ஒன்றாகும். இவ்விடயத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, தென்னிந்தியாவில் இந்தித் திணிப்பை தவிர்ப்பதில் தாராளமான போக்கையும் துணிவையும் கடைப்பிடித்த ஜவஹர்லால் நேரு போன்று மனோதிடமும் கொள்கைத் திட்பமும் கொண்டிருந்ததாலோ என்று நம்மவரிற் சிலர் இன்று அங்கலாய்க்கலாம். 1956இல் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இந்த அம்சம் பற்றி யான் இப்போது ஆராய முற்படவில்லை. ஆனால் வன்முறை விடயம் தொடர்பில் நெருங்கிய சம்பந்தம் உடைய ஓர் அம்சம் பற்றியே பேசமுற்படுகின்றேன். பாராளுமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்ட அதே நாள் பிற்பகல் மசோதாவை எதிர்ப்பவரான சில தமிழர்கள் காலிமுகத்திடலில் மௌனமாக, அமைதியான சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தினர். அவ்வாறு நடத்திய வேளை அங்கு ஏவிவிடப்பட்ட குண்டர்களால் தமிழ்ப் பிரமுகர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். நாட்டின் அரசத் தலைவர் இது நடைபெற அனுமதித்தது மாத்திரமன்றி, அமைதியை நிலைநாட்டவென அவ்விடம் வந்துசேர்ந்த போலிசாரை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மீண்டும் செல்லுமாறு பணித்தனர். இவ்வாறு அரசாங்கமானது தமிழ் அரசியற்குழுக்களின் அமைதியான எதிர்ப்பை வன்முறை கொண்டு தடுக்க முற்பட்ட செயலானது ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தொடர்ந்து இடம்பெறலாயின. இத்தகைய வன்முறைச் செயற்பாடுகளின் தாக்க விளைவுகள் எழுபது எண்பதுகளில் போர்முனைப்புக் கொண்ட இளந் தலைமுறையொன்று வன்முறைவழியில் உரிமைப் போராட்டத்தை நடத்தும் நோக்கம் கொண்டு உருப்பெற்றமையில் புலப்படலாயின.

இந்தச் சம்பவங்களை இனத்துறையிலன்றி சமூக பொருளாதாரத் துறையில் இடம் பெற்ற சில சம்பவங்களோடு ஒப்பிட்டு நோக்குவது பயனுடைத்தாகும்.

www.tamilarangam.net

1978இலும் 1989இலும் வேலைநிறுத்தம் செய்தும் வேலைக்குச் செல்வோரைத் தடுத்து நிறுத்தியும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர்களும் ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக்கழக மாணவர்களும் காடையர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். அமைதியான முறையில் வேலைநிறுத்தம் செய்யவும் ஆர்ப்பாட்டம் செய்யவும் அமைந்த உரிமைகள் அது வரை காலமும் வழமையான சனநாயகரீதியான உரிமைகளாகவே கருதப்பட்டு வந்தன. இப்போது வன்முறை கொண்டு அவற்றைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தன்மையில் சிறுபான்மைச் சத்தியாக்கிரகிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என்றின்னோரை அதிகாரத்திலுள்ளோர் இவ்வாறு நடத்த முனைந்ததன் அந்தரங்க எண்ணம் தான் யாது? 'இவர்கள் ஒருபோதும் மறவாத விதமாக ஒரு பாடம் புகட்டிவிடுவோம்' என்று உள்ளூரச் சிந்தித்தார்கள் போலும். ஆனால் அதிகாரத்திலுள்ளோர் புகட்டக் கருதியபாடம் ஒன்று. அவர்கள் கற்றுக் கொண்ட போதனை வேறாயிற்று. தமிழ் அரசியல் இயக்கம், தொழிலாளர் இயக்கம், மாணவர் இயக்கம் என்பவற்றிற்குத் தலைமை தாங்கினோர், அரசியல் யாப்பிற்கும் சனநாயகச் சட்டத்திற்கும் உட்பட்டு இயங்கிய அமைப்புகளிலிருந்து வளர்ந்தவர்களே. இவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள், சனநாயக முறையில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்ப்பதாயமைந்தன. அமைதியான சனநாயகரீதியான எதிர்ப்புகளை நசுக்கியொழிக்க முயன்றதன் விளைவாக வன்முறையை கையாளத் தயாராக உள்ள அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படத்தக்க ஒரே ஆயுதம் எதிர் வன்முறைச் செயலே என்ற நம்பிக்கை சிறுபான்மை, தொழிலாள, மாணவ கூட்டத்தின் புதிய தலைமுறையினரிடையே தோன்றி வளரலாயிற்று. 1982இல் நடைபெற்ற மக்கள் தீர்ப்பெடுப்பு - அதோடியன்ற அரசாங்கத் தரப்பில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, சனநாயக நெறிமுறையின் பிரதான அங்கமாகிய தேர்தல் முறையின்பாலும் இத்தகைய கருத்துப்பாங்கினையே கொள்ளும்படி செய்தது. இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் அரச வன்முறை கடுந்தீவிரவாதப் போக்கைப் பயன்படுத்தும் உத்திகளாக ஏகே 47, ரீ 56 ஆகிய ஆயுதங்களை கொண்டவர்களை வலுப்படுத்தவும் வழிசமைத்தது.

ஆயுதம் தரித்த கிளர்ச்சியை எதிர் கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டபோது கட்டவிழ்த்து விடப்பட்ட கரையற்ற வன்முறையை நியாயப்படுத்துவதற்கு பிறிதொரு தர்க்கீக ஞாயம் மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் நிலைபேறு அச்சுறுத்தல்களுக்குள்ளாகிய நிலையில் நாசம் செய்ய முயல்வோருக்கெதிராக எத்தகைய நடவடிக்கையும் செயற்பாடும் அனுமதிக்கப்படலாம். "போர்நிகழ்கையில் நெறி முறையேது" என்ற வார்த்தைகள்

www.tamilarangam.net

மக்களது வாழ்வும் மரணமும் உள்ள சகல நிகழ்வுகள் மீதும் யதேச்சாதிகாரம் செலுத்துவோர் வாயில் வாழ்வதை அவதானித்திருக்கலாம். இந்த அடிப்படையில் சித்திரவதை, கொலை, போராளிகளல்லாதார்க்கெதிரான பயங்கரச் செயல்கள் என்றின்னா யாவும் அரசு தனது உய்வினைப் பேணுதற்கு, அவசியமானவை என நியாயப்படுத்தப்படுவது சகஜமாயிற்று.

ஆட்சி நடத்தும் அதிகாரபீடத்தினரது தருக்க நெறிக்கும் போராளிக் குழுக்களது தருக்க நெறிக்கும்மிடையே பயங்கரமான ஒற்றுமை காணப்படுகின்றது. இரு சாரரும் குறிகோளை எய்துதற்கு எந்தவழியையும் பின்பற்றலாம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள். சனநாயகத்தைப் பேணுவதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதுமே குறிக்கோளாக உடையவர்கள் அரச தரப்பினர். தேசிய விடுதலை அல்லது சமூக விடுதலையே குறிக்கோளாக உடையவர் மறுதரப்பினர். இரு தரப்பினர் பார்வையிலும் தாம் போற்றும் குறிக்கோளை எய்தும் நெறியில் தனிப்பட்ட மக்களது வாழ்க்கையின் பெறுமானம் அற்பமே. இந் நியாயத் தொடையை ஏற்க முடியாமைக்குக் காரணம் வெறும் காருணிய உணர்வு நோக்கு மாத்திரமன்று. இந் நோக்கினைச் சிலர் அறநெறி உணர்ச்சி நுணுக்க சிந்தனை என ஒதுக்கிவிடலாம். இஃது ஏற்கப்படாமைக்குரிய உண்மைக்காரணம் கையாளப்படும் மார்க்கம் குறிக்கோளை நிர்ணயிக்கும் நிலையுடையதாகிறது என்பதேயாகும். கடந்த நூற்றாண்டில் ஜேர்மனிய சோஷலிச கவிஞனான லசாலி கூறியது இங்கு பொருத்தமுடைத்து.

மார்க்கத்தை வகுக்காமல் நோக்கத்தை காட்டாதீர்
நோக்கமொடு மார்க்கங்கள் பிணைந்துறுதல் இயல்பதனால்
ஒன்றினை நீர் மாற்றுவதால் மற்றதையும் மாற்றிடுவீர்
வேவ்வேறு மார்க்கத்தால் வேறுபட்ட பயன்விளையும்.

போராளிக்குழுக்களின் போக்குகள், செயற்பாடுகள் பற்றிப் பின்னர் விளக்குவேன். முதலில் சனநாயக நெறியற்ற வழிமுறைகளால் சனநாயகத்தைப் பேணுதலும் சட்ட நெறிமுறையைக் கடந்து சட்டத்தினையும் ஒழுங்கையும் பேணுவதுமாகிய அர்த்தமற்ற நிலைப்பாடு ஆராயப்படற்குரியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தினை, பலாத்காரமாக வீழ்த்த எவரேனும் முயலுமிடத்து, அம் முயற்சியை முறியடித்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமை அரசுக்கு நிட்சயமாக உண்டு. ஆனால் ஒரு சனநாயக நாடு பயங்கரவாதத்தையும் கிளர்ச்சி வாதத்தையும் கூட (அந்த) நெறிமுறையிலேயே வழிவகைகளைக் கையாண்டு போராடவியலாது. அவ்வாறு போராடுமிடத்தோ,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராடமுற்படுமிடத்தோ எதிர்க்கும் அரசுக்கும் எதிர்க்கப்படும் சக்திகளுக்குமிடையே, இரு சாரரும் நெறியில்லா நெறியைக்கையாளும் தன்மையால் பேதம் காணவியலாது போய்விடுகிறது. இதன் விளைவாக அத்தகைய வழிமுறைகளைக் கையாளுவதால் எந்த மக்களைப் பாதுகாக்க முயலுவதாக அரச சொல்லிக் கொள்ளுகின்றதோ அம்மக்களின் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிட்டாமல் அந்நியமாகி விடுகின்றன. உள்நாட்டு யுத்தங்களில் துப்பாகியாலன்றி, மக்களின் ஆதரவு மூலமே வெற்றி காணப்படுகின்றது. அவ்வரசியல் போரில், ஒவ்வொரு நாருக்கும் இழைக்கப்பட்ட சித்திரவதையும் காரணமின்றிப் புரியப்பட்ட கொலையும், பயங்கரமூட்டப்பட்ட ஒவ்வொரு கிராமமும், காலாந்தரத்தில் மறுதரப்பின் வெற்றி நிலைக்கு அனுகூலமாகவேயமையும். இவ்வுண்மை வடக்கிலும் கிழக்கிலும் தெளிவாக நிருபிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய பாகங்களிலும் இது உறுதியாக்கப்பட்டு வருகிறது.

இப்போது போராளிக் குழுக்களின் தருக்க நிலைப்பாட்டினை நோக்கலாம். இவர்கள் தமது அரசியற் போராட்டத்திற்கு வன்முறையினை தேர்ந்த நெறியாகக் கொண்டுள்ளனர். இங்கு தோன்றும் பிரச்சனைகள், சில முக்கிய அம்சங்கள் நோக்கில் அரச வன்முறைப் பிரச்சனைகளிலிருந்து வேறுபட்டவையாகும். பாராளுமன்ற சனநாயக சட்டத்துக்கு அமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் நெறிமுறையற்ற வன்முறைக்கு இடமளிக்காத அரசியற் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகக் கூறுவன. ஒரோருகால் சட்ட முரணான வன்முறைகளை அரசாங்கம் கைக்கொளளுமிடத்து, அவை பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் சட்டநெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசாங்க நடவடிக்கைகளை ஆட்சேபிக்கலாம். ஆனால் போராளிக் குழுக்கள் வன்முறையே தமது மார்க்கம் என்பதனை ஒளிவுமறைவேதுமின்றித் தெட்டத் தெளிவாக ஒத்துக் கொள்ளுகின்றன. அத்துடன் வன்முறை நெறியாலேதான் சமூகத்தை மாற்றியமைத்தலும் சாலும் என்பதும் அவர்களது நம்பிக்கை.

போராளிக் குழுக்கள் தமது செயற்பாடு விடுதலை நோக்குடையதெனக் கூறி வரலாற்று புரட்சிப் பாரம்பரியத்தோடு தம்மையும் சார்த்தித் தம் உந்நத நிலையை உணர்த்த முற்படுவர். அடுத்த மாதம் பிரான்சும் உலகமும் மாபெரும் புரட்சியொன்றின் இருநூற்றாண்டு நிறைவை நினைவுகூர உள்ளன. இதனையடுத்து ருஷ்ய, சீனப்புரட்சிகளும் இன்னும் அவற்றையடுத்த புரட்சிகளும் கொடுங்கோன்மையும் அநியாயமும் மலிந்த ஆட்சிகளை அகற்றுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டென்ற எமது நம்பிக்கைக்கு உரமூட்டுவனவாயுள்ளன. இப்புரட்சிகள் நடைபெற்றபோது இடம்பெற்றனவெல்லாம் நியாயத்தின்பாற்பட்டவையோ என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

... க இ—முண்டு. ஆனால் என்னதான் குறைகள் கூறப்படினும் மாபெரும் புரட்சிகளது விடுதலைப்பண்பு அங்கீகரிக்கப்பட வேண்டியதொன்றே. அத்துடன் கலாந்தரங்களில் அவற்றுக்கெதிராகப் பூசல்கள் கிளப்பப்பட்ட போதும் அவை மீண்டும் புத்துயிர் பெற்றுத் தம் புரட்சித் தன்மையைச் செறியச் செய்து நின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆகவே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைத்துத் தோற்றங்களிலும் வன்முறைகள் கண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அல்லது மாறாக, விடுதலையின் பெயரால் வன்முறை இழைக்கப்படும் போதெல்லாம், அது நியாயமானதென ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனப் புகலும் போராளிகள் கூற்றை நாம் ஏற்றுக் கொண்டு அனுசரிப்பதா?

மார்க்சிய வேதாந்தம் ஆசங்கைக்கிட மற்ற புனித கோட்பாட்டதிகாரமுடையதெனக் கருதுபவருள் யான் ஒருவன் அல்லன். உண்மையில் இன்றைய காலகட்டத்தில் மார்க்ஸியவாதி என்ற நாமப்பட்டி புனைவதையும் விரும்பவில்லை. ஆனால் இந்த வன்முறை என்ற குறிப்பிட்ட விடயத்தைப் பொறுத்தவரை உயர்தனிச் செம்மை சான்ற மாக்ஸிய வாதிகளின் சிந்தனை பயன்தரும் தாற்பரியம் உடையதென்றே கருதுகிறேன். அத்துடன் இன்றைய போராளிக் குழுக்களின் வன்முறைபற்றிய நிலைப்பாட்டைக் கணிப்பதில் இச்சிந்தனை துணைநிற்கவல்லது என்றெண்ணுகிறேன். செம்மை மாக்ஸிய வாதிகள் நடப்பிலுள்ள அரசினைக் கவிழ்ப்பதற்கு பெருந் தொகை மக்களும் ஈடுபாடு கொண்டு போராடும் புரட்சிகளுக்கும், ஒரு சிறு பான்மைக் கூட்டம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மேற்கொள்ளும் சடுதிச்சதி, கலகம் போன்ற தீவிர செயல்களுக்குமிடையே தெளிவான வேறுபாடு உண்டென்பதைக் கண்டனர்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு, இவ்விரு சார்பினரும் கையாண்ட வழிமுறைகளிடையே உள்ள பேதங்களையும் வேறு படுத்திக் கண்டனர். மக்கள் கலந்து கொள்ளும் மாசனக் கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு போன்ற செயற்பாடுகள் புரட்சியின் வடிவங்கள். பகிரங்க இடங்களில் குண்டு வெடித்தல், நாசகார நடவடிக்கை, தனிநபர்களைக் கொலைசெய்தல் போன்ற செயற்பாடுகள் மாற்றத்தின் முகவர்களாக மக்கள் பேரில் தம்மைப் பதிவீடு செய்ய முனையும் குழுக்கள் மேற் கொள்ளும் செயல்களாகும். இப்படிச் சொல்வதால் புரட்சி விடயத்தில் தாமே சுயமாகத் தொழிற்பட்டார்கள் என்று பொருளாகாது. புரட்சியிலும், மக்கள் அணிகளாகத் திரட்டப்பட்டு வழிநடத்தப்பட்டார்கள். ஆனால் பொதுமக்கள் கூட்டம் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேறு வழியில்லை என்று உணர்ந்தாலன்றி கிளர்ந்தெழ மாட்டார்கள். மாசனப்புரட்சியின் போது வன்முறையிடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருங்கட்டத்தில் கூறத்தகு தார்மிக நியாயவாதம் இதுவே. அதாவது மக்கள் தங்கள் செயற்பாங்கு மூலம், தமக்கு விமோசனத்துக்கு வேறுவழியில்லை என்பதைப் புலப்படுத்தலேயாகும். ஆனால் ஒரு சிலரைக் கொண்ட குழுவானது, மக்கள் வெறும் பார்வையாளர்களாய் விளங்க, பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கையாண்டு தாமே சமூகத்தை மாற்ற முனையும் போது, "விரும்பிய குறிக்கோளை எய்துதற்கு எத்தகைய வழிவகையையும் கையாளலாமா?" என்ற வினாவை நாம் எழுப்புவது மாத்திரமன்றி லசோல்(Lassalle) வினாவிய பாணியில் "கடைப்பிடிக்கும் மார்க்கம், கருதிய குறிகோளையடைய வழிவகுக்குமா?" என்ற வினாவையும் எழுப்ப வேண்டும். விடுதலையே குறிகோள் எனில் - அத்தகைய விடுதலையானது உள்ள நிலையிலும் கூடிய சுதந்திரமும், நீதியும், பரிவுணர்வும் நாகரிகப்பண்பும் கொண்ட சமுதாயத்துக்கு வழிவகுப்பதாதல் வேண்டும் - யாரைக் கொன்றொழிக்கும் என்ற உணர்வின்றிக் குண்டு வைத்தலும், அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தல், தமக்கு மாறுபட்ட அரசியல் முகாமைச் சேர்ந்தவர்களை ஒழித்துக் கட்டுதல் என்றின்ன செயற்பாடுகளாய், இவ் விடுதலைக் குறிக் கோள் எய்தப்பெறலாமா? இத்தகைய கட்டற்ற கண்மூடித்தனமான வன்முறைச் செயற்பாட்டு நடைமுறை அதில் பங்குகொள்வோரையும் செய்யக் கட்டளையிடுவோரையும் கட்டளைகளை நிறைவேற்றுவோரையும் முரட்டுத்தனமும் மிருகவெறியுமுடையவர்களாக்கி விடுகிறது. இவர்கள் அதிகாரத்திற்கு வரும்பட்சத்தில் அவர்கள் உருவாக்கும் சமூகத்திலும் இவ்வன்முறைச் சுவடு பதிக்கப்படவே செய்யும். அத்தகைய சமுதாயம் பொதுமக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளியாது அரசியல் தலைவர்களால் நடத்தப்படும் இறுக்கமான, விறைப்பான, கட்டுப்படுத்தப்பட்ட சமுதாயமாகவே விளங்கும். இங்கு அரசுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் நிலவுவதற்கே இடமிருக்காது. அத்தகைய போக்கும் நோக்கும் தீவிரமாகக் களையப்படும். இத்தகைய நிலையை விடுதலை எனக் கூறுவது இரணியன் தனது ஆட்சியில் "இரணியாநம" என்ற பாங்கில் சொற்களுக்கு அவன் கற்பித்த பொருளே பொருளாக மக்கள் கையாண்ட மொழிமுறைக்கே அமைவுடையதாகும்.

இனி தனிப்பட்டவர் கொலை செய்யப்படுவது பற்றி இங்கு சிறிது குறிப்பிட விரும்புகின்றேன். ஏனெனில் அது நாம் இன்று நினைவு கூரும் நடுநயாயகமான சான்றோனின் விதியோடு சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. கடந்த சகாப்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அவதானிக்குமிடத்து எத்தகைய விடுதலை எய்தல் நோக்கிலும் கொலை செய்தல் ஆகியவழிமுறை ஒவ்வாது என ஒதுக்கப்பட்டமையின் அறிவுடைமை உணர்தற்பாலது. ஜனரஞ்சக அபிமானமற்ற அல்லது அடக்கு முறையில் அரசின் முகவர்களாக விளங்கியவர்களைக் கொலை செய்துவிட்டு அவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரும்பத் கொலைத்தண்டனை அவர்கள் கடந்தகாலத்தில் இழைத்த கொடுஞ்செயல்களுக்கு பரிகாரமாயமைந்தவை என்று கூறலாம். அதனால் அவர்களுக்காக எவரும் கண்ணீர் வடியாமலும் இருக்கலாம். ஆனால் இத்தகைய தூய்மையிழந்த பாசிபடர்ந்த மார்க்கத்தில் பயிலத்தொடங்கிவிட்டால் அது நிறுத்த முடியாததொடர்கதை நிகழ்வாக அமையும். பொலிசுக்கு தகவல் கொடுப்பவரை ஒழிக்க முற்படுவீர்கள். அது தக்க செயலே என்று நியாயப்படுத்துவீர்கள். ஆனால் அவ்வளவோடு நிறுத்திக் கொள்ள மாட்டீர்கள். ஏனென்றால் விடுதலையென்ற புனித குறிக்கோளை எய்த நின்ற மார்க்கத்தில் குந்தகமாக நிற்பவர்களைக் கொலை செய்வது நியாயமே என ஏலவே நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு விடுதலை அடையப் பெறுவதற்கான சரியான உபாயம் உங்களிடத்தும் உங்கள் குழுவிடத்தும் மட்டுமே உண்டென்பது பற்றியும் உறுதியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருபோதும் தவறிழைக்க மாட்டீர்கள் என்ற உமது பூரணமான உறுதிபடைத்த நம்பிக்கையும் நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தின் இரக்க உணர்வற்ற பாங்கும் இணைந்த நிலை வெகுபயங்கரமானது. இத்தகைய தார்க்கிக நியாயத்தை அரணாகக் கொண்டு உங்களைப் போன்று தாமும் அதே இலட்சியத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் (ஆனால் உங்கள் கருத்துப்படி) தவறான மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற கட்சியினரை அல்லது குழுவினரையும் கொலை செய்யப்புகுவீர்கள். ஆனால் அவ்வளவோடு அமையமாட்டீர்கள். உங்கள் தர்க்க நியாயப்படி, உங்கள் குழுவினருக்குள்ளேயே உங்களோடு மாறுபடுபவர்களை துரோகிகளாகக் கருதி அவர்களையும் ஒழிக்க முனைவீர்கள். இன்னும் இந் நடைமுறைப் பாங்கானது விரும்பிய அதிகாரம் கைப்பற்றப்பட்டவுடன் ஓய்ந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. அது வகுத்துச் செல்லும் பாதையானது சித்திரவதைக் கூடங்கள், ஓயாத ஒழித்துக்கட்டல்கள், கொலைமுகாம்கள் மலிந்த சமுதாயத்துக்கே இட்டுச் செல்வதாகும். இந்த ஒளி வெளிச்சத்தில் கந்தசாமி அவர்கள் ஏன் இறக்க நேர்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளல் இயலும். அவர் தனிமனித மனச்சாட்சிச் சுதந்திரத்திலும் நீதியிலும் நம்பிக்கை கொண்டவர்; அவர் அதனை எந்த ஒரு அரசியற் குழுவுக்கோ தலைவருக்கோ தாரைவார்த்துக் கொடுக்க விரும்பவில்லை. அவருடைய நினைவுமலரைப் படிக்க நேர்ந்த போது அவர் கைபட எழுதிய சில பகுதிகளை வாசித்து, வியப்பும் அதிர்ச்சியுமடைந்தேன். சுதந்திரமான தடையற்ற சிந்தனை, செயற்பாடு பற்றிய அவர் தம் கருத்துக்களை அப்பகுதிகள் துல்லியமாகவும் ஒழிவுமறைவின்றி நேரிதாகவும் புலப்படுத்துவன. ஒரு குறிப்பு சற்றடே றிவியூ (SATURDAY REVIEW) பத்திரிகை தொடங்குவது பற்றிய திட்ட ஆலோசனை விஞ்ஞாபனத்தின் ஓர் பகுதியாகும். அக் குறிப்பில் வருவன இவை.

www.tamilarangam.net

இது அரசியல் பத்திரிகையாகவோ அல்லது ஒருபுடைச் சார்பினதாகவோ அமையும் நோக்கமுடையதன்று. தமிழர்கள் உரிமைகள், இந் நாட்டில் இன உறவுகள் என்பவை பற்றிய சகல கருத்துக்களும் வெளிப்படுத்தற்குரிய அரங்காகவே அது அமையும். இருப்பினும் குறுகிய நோக்க முடையதாகாது. பத்திரிகைப் படைப்பின் எழுத்துநடை தனித்தன்மை வாய்ந்ததாயினும் அணுகுமுறை தாராண்மையும் தூய்மையுமின்றதாகவே விளங்கும்."

பின்னர் ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "நாம் பத்திரிகையின் சுதந்திரத்தைப் பேணுவதில் மிகுந்த கவனமுடையவர்களாதல் வேண்டும். இச் சுதந்திரம் நமது கருத்துக்கொவ்வாததை மறைப்பதைவிட முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவதன் மூலமே எய்தப்பெறலாம்."

அவர் கடத்தப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், ஏலவே உயிர்க்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டிருந்த வேளையிலும் த.அ.பு.அ. பற்றிப் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"சுதந்திரமான அமைப்பாக நம்மால் இயங்கமுடியாது விட்டால், அதனை மூடிவிடுவதே உகந்தது."

இத்தகைய ஒரு மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பது பலவந்தமான அபிப்பிராய ஒருமைப்பாட்டை செயலுறுத்த முனையும் எக் குழுவின் இயக்கத்திற்கும் ஒரு சவாலாகவே அமையும் என்பதை உணர்ந்து கொள்வது சிரமமன்று. கந்தசாமி அவர்கள், இன்று இந்நாட்டில் சிலரினுஞ் சிலரே பாதுகாக்க முனையும் ஒரு இலட்சியத்துக்குத் தம் வாழ்வை அர்ப்பணித்த மாபெரும் தியாகி என்று துணிந்து கூறலாம்

## சிந்தனை

ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப்பரிமாறல்கள் மூலமே
சிந்தனை உருவாகின்றது.
வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும்
விமர்சனங்களையும் சிந்தனை வரவேற்கின்றது.
சிந்தனையில் வெளியாகும ஆக்கங்களின்
கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின்
சுதந்திரமான கருத்துக்களேயாகும்.
ஆறு இதழ்களுக்கான அன்பளிப்பு 20 டிஎம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோவியத் சீர்திருத்தங்களும் ரொட்ஸ்கியவாதிகளும்

நான்காவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவரான தோழர் ஏர்ணஸ்ட் மண்டேல், மொஸ்கோவிலிருந்து வெளிவரும் "நியு டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கத்தை கீழே தருகின்றோம்.

நியுடைம்ஸ்: நாங்காவது அகிலத்தின் இன்றைய அடிப்படை (கொள்கை) மூலோபாயம் என்ன?

ஏணர்ல்ட் மண்டேல்: எமது கொள்கையைச் சுருக்கமாக இப்படிக் கூறலாம்;

நாம் புரட்சிவாதிகள். தொழிலாளர்களுக்கும் மற்றைய வறிய விவசாய மக்களுக்கும் நன்மை புரிவதற்காக என செய்யப்படும் எந்தச் சீர்திருத்தமும் இன்று உலகத்தை உலுக்கும் முரண்பாடுகளைத் தீர்க்க எந்தவகையிலும் போதுமானவையல்ல என்று நாம் திடமாக நம்புகின்றோம். மக்களின் முழுமையான பங்களிப்புடன், அவர்களின் செயற்பாடுகளுடன், அவர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் மக்கள் அமைப்புகளுடாகச் செய்யப்படும் புரட்சிகரமான மாற்றங்கள் மூலமாகவே இந்த முரண்பாடுகளை அகற்ற முடியும்.

சாதாரணமாகச் சொல்வதாக இருந்தால், இன்றைய உலகின் புரட்சிகர மாற்றங்களை நாம் மூன்று வகையாகப் கணிக்கின்றோம்:

வளர்ச்சியடைந்த (ஏகாதிபத்திய) நாடுகளில் உருவாகும்

www.tamilarangam.net

தொழிலாள(பாட்டாளி) வர்க்கப் புரட்சி;

மூன்றாவது உலக நாடுகளில் தேசிய - ஜனநாயக போராட்டங்களும் சோசலிசப்புரட்சியும் கூட்டாக நிறைவேற்றும் (பாட்டாளிவர்க்கம் விவசாயத்தொழிலாளர்களுடன் இணைந்து அதிகாரத்தை கைப்பற்றும்) நிரந்தரப்புரட்சி;

ஸ்டலினிச சர்வதிகாரம், அரசு செய்த "சோசலிச" நாடுகளில் அதிகாரிகளின் ஆட்சிக்கெதிராக நடைபெறும் அரசியல் புரட்சி.

நாம்,முதலாளித்துவம் ஒழிக்கப்பட்ட பின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சோசலிச ஜனநாயகத்தின் தீவிர ஆதரவாளர்கள்;

சோசலிச ஜனநாயகத்தில், தொழிலாள வர்க்க ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவை சுதந்திரமாக இயங்கும் உரிமையினை நாம் வலியுறுத்துகிறோம்;

அரசில் மற்றும் கலாச்சார கருத்துச்சுதந்திரங்கள் (பன்மை) பேணப்பட வேண்டும்;

தனி கட்சி ஆட்சி சர்வதிகாரத்தை நாம் முற்றாக எதிர்க்கின்றோம்;

சர்வஜனவாக்குரிமை, பல அபேட்சகர்கள் போட்டியிடும் சுதந்திரமான தேர்தல்கள் ஆகியவற்றை நாம் ஆதரிக்கின்றோம்;

பத்திரிகைச் சுதந்திரம், அமைப்பாகும் உரிமை...இவையெல்லாம் சோசலிச ஜனநாயகத்தின் பண்புகள்.

நாம் சர்வதேசவாதிகள். இன்றைய உலகின் அடிப்படைப் பிரச்சனைகள், சகல தொழிலாளமக்கள், அவர்களின் ஆதரவு சக்திகள், தேசியஇனங்கள் ஆகியவற்றின் ஐக்கிய முயற்சியினாலேயே தீர்க்கப்பட முடியும். லெனின் எமக்குப் போதித்தபடி தமது சொந்த நாடுகளிலேயே உருவாகும் பேரினவாதத்தை எதிர்த்துப் போராடும் ஒரு சர்வதேசியத்தில் நம்பிக்கை கொண்ட பரம்பரையினரை நாம் உருவாக்கியுள்ளோம். எந்த ஒரு தனிநாட்டின் வெளிநாட்டுத்

www.tamilarangam.net

கொள்கையும், எமது கொள்கைகளைத் தீர்மானிப்பதில்லை. நாம் சுதந்திரமான தீர்மானங்களை எடுக்கின்றோம். பிரான்ஸ் அரசு அல்ஜீரியா மக்களுக்கெதிராக நடத்திய போருக்கெதிரான இயக்கத்தின் முன்னணியில் எமது பிரான்ஸ் தோழர்கள் இருந்தார்கள். போக்லண்டில் பிரித்தானியா நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கெதிரான போராட்டங்களில் எமது பிரித்தானியாத் தோழர்கள் பங்கு கொண்டார்கள்.

நியுடைம்ஸ்: மனிதகுலம் இன்று எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றியும், புதிய சூழ்நிலமைகளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளக்கூடிய முதலாளித்துவத்தின் தன்மை பற்றியும் நீங்கள் குறைவாகவே மதிப்பிடுவது போல தோன்றுகிறது.

ஏர்ணஸ்ட் மண்டேல்: இதுதான் இன்று (இடதுசாரி மிதவாதிகள், சமூகஜநாயகவாதிகள், "யுரோகம்யுனிஸ்டு"கள்...போன்ற) சீர்திருத்த வாதிகளுக்கும் புரட்சிவாதிகளுக்குமிடையிலான விவாதமாக இருக்கின்றது. 'எந்தப் பிரச்சனையையும் உலகப்பின்னணியில் நோக்கவேண்டு'மென கொபர்ச்சோவ் கூறும் பொழுது, "ஒரு தனி நாட்டில் சோசலிசத்தை கட்டி எழுப்பலாம்" என்ற ஸ்டாலினின் கோட்பாட்டிலிருந்து ஒரு படி முன் வந்துவிடுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். "தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டி எழுப்பலாம்" என்ற ஸ்டாலினிச கற்பனைக் கொள்கையை நாம் எப்போதும் எதிர்த்து வந்திருக்கின்றோம். ஒரு நாட்டினிலோ அல்லது பல நாடுகளிலோ தொழிலாளர்கள் சோசலிச சமூக மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் பொழுது - இந்த புரட்சிகர மாற்றங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் ஏற்படும் வரை - அவர்கள் அளவற்ற இடர்களைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இன்று மனிதகுலம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகம் பரந்தவிதத்திலேயே தீர்வுகளைக் காண முடியும்: அணுகுண்டு, நச்சுவாயு ஆகியவற்றுடன் கூடிய யுத்த அபாயம், சூழல்பற்றிய பிரச்சனைகள், பட்டினி, நோய், மூன்றாமுலக நாடுகளின் வறுமை...இவை மனித குலத்திற்குப் பொதுவான பிரச்சனைகள்!
'இந்தப் பிரச்சனைகள் முழு மனித குலத்தையுமே ஆபத்தான நிலமைக்கு இட்டுச் செல்கின்றன'என்று கொபர்ச்சோவ் சொல்லும் பொழுது, நாம் அதை ஆமோதிக்கின்றோம். எந்த ஒரு கம்யுனிஸ்டும், சோசலிஸ்ட்டும், மனிதாபிமானமுள்ளவனும் இந்தப் பிரச்சனைகளின் தீர்வுகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.
இந்த ஆபத்துக்களை முழுமையாக இல்லாதொழிப்பது எப்படி? என்பதே இன்றைய கேள்வியாகும். "சர்வதேச பெரும் தொழில் நிறுவனங்களின்"(International Big Business) ஒத்துழைப்புடன் இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதுதான் கொபர்ச்சோவின் "புதியசிந்தனை"யாக இருக்கின்றது!
முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகள், முதலாளித்துவ சமூகத்ினுள் காணப்படும் உள்முரண்பாடுகள், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மூன்றாமுலக நாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகள்; இவை எல்லாம் காலப்போக்கில் மறைந்து சமுகமான நிலமை தோன்றும் என எண்ணுவது வெறும் கற்பனையாகும். மாறாக தொடர்ச்சியாக ஆபத்தான குழப்ப நிலமைகள் உருவாகிக் கொண்டே இருக்கும். சீர்திருத்தவாதிகளும் புரட்சிவாதிகளும் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பது வேறு விடயம்!
1945ல் இருந்து இன்று வரை உலகத்தின் எந்த மூலையாலாவது ஒரு போர் ஏற்படாமல் ஒரு வருடம் கூடக் கழியவில்லை என்பதை நான் குறிப்பிட வேண்டும். இந்த இடைக் காலத்தில் எண்பது (80) போர்கள் நடந்து முடிந்து விட்டன. எந்த ஒரு பிரச்சனையையும் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்கொலை யுத்தத்தினால் தீர்க்கப்படுவதை நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இன்றுள்ள ராணுவ - தொழில் நிறுவனங்களை எப்படி இதை ஏற்றுக் கொள்ளச் செய்வது? பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களையும், விவசாயிகளையும், புத்திஜீவிகளையும் கொன்றுகுவித்துக் கொண்டிருக்கும் எல்சல்வடோர், கவுத்தமாலா நாடுகளின் சர்வதிகாரங்களை இதை எப்படி ஏற்றுக் கொள்ளச் செய்வது? வெடித்துக் கொண்டிருக்கும் சமூகப்புரட்சிகள் அதிகரித்துக் கொண்டுதானிருக்கும். இந்த நிலமைகளில் கமுயுனிஸ்டுகளின்(சோசலிஸ்டுகளின்) கடமை அவற்றை வெற்றியடையச் செய்வதுதான்.

நியுடைம்ஸ்: உங்களுடைய நூல்களில் கம்யுனிச நாடுகளிலுள்ள "அதிகாரத்துவத்தை" ஒரு சமூகசக்தியாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதன் அர்த்தம் என்ன?

ஏர்ணஸ்ட் மண்டேல்: "அதிகாரத்துவ"மென நாம் குறிப்பிடும் பொழுது, சமூகத்தில் உள்ள ( அரசு, பொருளாதாரம், 'வெகுசனஅமைப்புகள்', கலைகலாச்சாரம்) சகல பகுதிகளிலும் ஏகபோக அதிகாரத்தைக் கொண்டவர்களைக் குறிப்பிடுகின்றோம். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது, சாதாரண பொது மக்களுக்கு இவற்றில் எந்தவிதமான பங்கும் இருப்பதில்லை, என்பதுதான்.

இவ்வாறு அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, ஏகபோக அதிகாரம் சடத்துவமான சலுகைகளையும் அளிக்கின்றது. சிறு அதிகாரிகளுக்கு கிடைக்கும் சலுகைகள் மிதமாக இருந்தாலும் அவற்றின் நிரந்தரத்தன்மையும் அதனால் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்களையும் கணக்கிலெடுக்க வேண்டும். மேல் மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்குள்ள சலுகைகள் அமிதமானவை. விசேஷபொருட்கள் விற்பனைநிலையங்கள்,

www.tamilarangam.net

கிராம உல்லாச விடுதிகள், விசேஷ ஆஸ்பத்திரிவார்ட்டுகள், பள்ளிக்கூடங்கள், தடையில்லாத வெளிநாட்டுப் பிரயாண வசதிகள்....
ஏகபோக அதிகாரமும் நுகர்ச்சிச் சலுகைகளும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதுடன் பிரிக்கமுடியாதவையுமாகும். ஒன்றை அழிக்காமல் மற்றதை அழிக்க முடியாது. "மையப்படுத்தப்பட்டகொள்கை" என்பது "மையப்படுத்தப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின்" மீது ஆளுமை செய்கின்றது. இந்த நிலமைகளில் "சகல அதிகாரங்களும் சோவியத்துக்களுக்கே" என்ற கோஷத்தின் அர்த்தம், அதிகாரிகளின் ஏகபோக அதிகாரத்தை இல்லாமல் செய்வது, அவர்களுடைய சலுகைகளை இல்லாமல் செய்வது, என்ற அர்த்தமாகின்றது.
நியுடைம்ஸ்: சோவியத கம்யுனிஸட் கட்சியும் மிக்யில் கொபர்ச்சேவும் அதைச் செய்வதற்கு முயற்சிக்கவில்லையா?
ஏர்னஸ்ட் மண்டேல்: மிக்கயில் கொபர்ச்சேவும், சில சமூக விஞ்ஞானிகளும், சித்தாந்தவாதிகளும், அவரை ஆதரிக்கும் சில கட்சித்தலைவர்களும், அதிகாரிகளின் சலுகைகளையும் துஷ்பிரயோகங்களையும் அம்பலப்படுத்தியுள்ளார்கள் என்பதில் கருத்துவேறுபாடு கிடையாது. அது வரவேற்கத்தக்கது.
ஆனால், நாம் உண்மைகளை எதிர்நோக்க வேண்டும். அதிகாரிகளிடமுள்ள அதிகாரங்களையும் சலுகைகளையும் இல்லாமல் செய்வதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை; சலுகைகளை இல்லாமல் செய்வதில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளிலும் பார்க்க, வரையறுக்கப்பட்ட விதத்தில் அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முன்னேற்றமான நடவடிக்கைகள் பற்றி மட்டும்தான் நாம் குறிப்பிடலாம்.
இது சரித்திரரீதியான ஒரு பொதுவிதியை எமக்கு உணர்த்துகிறது; 'அதிகாரிகளின் சர்வதிகாரம்' ஒரு அமைப்பு. எந்த ஒரு அமைப்பையும்

www.tamilarangam.net

படிப்படியாக அழிக்கமுடியாது. ஒரு புரட்சியினாலேயே ஒரு அமைப்பை மாற்றியமைக்க முடியும்.

நாம் இந்தக் கொள்கையை கடந்த ஐம்பத்தைந்து(55) வருடங்களாக வலியுறுத்திவந்தபடியினால் எமக்கு "எதிர்ப்புரட்சியாளர்கள்" என்ற முத்திரை குத்தப்பட்டது. இன்று ருசியாவிலுள்ள அதிமான மக்களுக்கும், சர்வதேச கம்யுனிஸ்ட் இயக்கங்களில் இருப்பவர்களுக்கும், யார் புரட்சியாளர்கள், யார் எதிர்புரட்சியாளர்கள் என்பது நன்றாக விளங்கியுள்ளது.

இன்று சோவியத் மக்களுக்கு அதிருப்தியைக் கொடுப்பது, சீர்திருத்தம் பற்றிய பேச்சுக்களுக்கும் உண்மையான செயற்பாடுகளுக்குமிடையிலான வேறுபாடுதான். அதிகாரத்துவம் இன்னும் தனது சலுகைகளை வைத்திருப்பதுடன் அதிகார துஷ்பிரயோகங்களையும் தொடருகின்றது.

இதற்கான காரணம் தெளிவாகவேயுள்ளது. கொபர்ச்சோவ் "புரட்சி" என்று கூறுவதும் மேற்கத்தைய பார்வையாளர்கள் (அதிகாரத்திலுள்ளவர்களினால்) 'மேலிருந்து செய்யப்படும் புரட்சி'என வர்ணிப்பதும், உண்மையில் அதிகாரிகளின் ஆட்சியை ஒரு நியாயமான ஆட்சியாக்கும் முயற்சியேயன்றி அதை இல்லாதொழிக்கும் முயற்சியல்ல. இவர்களுடைய ஆட்சியை அடிமட்டத்திலிருந்து ஆரம்பமாகும் ஒரு புரட்சியினாலேயே இல்லாதொழிக்கமுடியும். ஆயிரக்கணக்கான சோவியத் தொழிலாள மக்களின் தீர்க்கமான நடவடிக்கையினாலேயே அது சாத்தியமாகும்.

நியுடைம்ஸ்: அதிவேகமாக நடவடிக்கைகளை எடுத்து நிலமைகளை ஸ்திரமற்றதாக்குவதுடன், கட்டுப்பாடற்ற மக்களின் நடவடிக்கைகள் குழப்பநிலைகளை உருவாக்கி சீர்திருத்தத்திற்கு எதிராக, உள்ளும் வெளியிலுமுள்ள சக்திகளுக்கு நன்மை பயக்காதா?

www.tamilarangam.net

ஏர்னஸ்ட் மன்டேல்: "குழப்பநிலை","ஸ்திரமற்றநிலை", நவ ஸ்டலினிச பழமைவாதிகள் மீண்டும் பதவிக்கு வரலாம் என்ற பயம்; இவை எல்லாம் முழுமையான உண்மைகளல்ல. தொழிலாள மக்களையும், "தீவிரவாதிகளையும்" கட்டுப்பாட்டுடன்(மிதமாக) நடக்கவேண்டுமென வேண்டுகோள் விடுப்பது தவறாகும். இவ்வாறு அழைப்பு விடுப்பது உங்கள் நாட்டில் (ருஷ்யா) நடப்பதாகக் கூறப்படும் மாற்றங்களுக்கு முற்றிலும் முரணாகும். உண்மையான ஜனநாயக மாற்றங்களுக்கெதிரான நவ ஸ்டலினிஸ்டுகளுக்கு எதிராகவும், மேல்மட்ட அதிகாரிகளின் சலுகைகளை இல்லாமல் செய்வதற்குமான மக்களின் நடவடிக்கைகள், இன்னும் முழுமை பெறாமலே இருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சுதந்திரமாக தீர்க்கமான நடவடிக்கைகளில் இறங்கும் பொழுது நவஸ்டாலினிஸ்டுகளும் அதிகாரிகளும் பலமிழுப்பார்கள்.

அதே நேரத்தில், சீர்திருத்தங்களை ஒத்திப்போடுவதும், அந்தச் சீர்திருத்தங்களின் வரையறுக்கப்பட்ட தன்மையும் (உதாரணம்: பொருளாதாரத்தின் மீது உண்மையான, தொழிலாளர்களின் ஆளுமை உருவாக்க தயக்கங் காட்டுதல்.) மக்கள் இவற்றின் மீது ஏமாற்றமடையவும் விரக்தியடையவும் காரணமாகின்றது. இதுதான் உண்மையான ஆபத்து. அடுத்த ஆபத்தான விடயம், மக்களின் வாழ்க்கைத்தரங்களில் எந்தவித உயர்ச்சியையும் ஏற்படுத்தத் தவறுவதேயாகும். மக்கள் இதனால் சோர்வடையக்கூடும், இதையே நவஸ்டாலினிஸ்டுகள் எதிர்பார்க்கின்றார்கள்.

கொர்பர்சோவின் கொள்கைகள் மீது நாம் இடதுசாரிக் கண்ணோட்டத்துடனேயே விமர்சனங்களை முன்வைக்கின்றோம், இது வலதுசாரிகளின் விமர்சனங்களிலிருந்து மாறுபட்டது. நான், நவஸ்டாலினிச பழமைவாதிகளை ஒரு வலதுசாரி அரசியல் சக்தியாகவே

www.tamilarangam.net

கருதுகிறேன்; அவர்களினால், சோவியத் மக்களுக்கும், சோவியத் தொழிலாளர்கள், சர்வதேச கம்யுனிச இயக்கத்தின் பகுதியான சர்வதேச தொழிலாள வர்க்கம்; ஆகிய எல்லோருக்குமே ஆபத்து உள்ளது. மார்க்ஸியம் மற்றும் லெனினது படிப்பினைகள் ஆகியவற்றுடன் எந்த வித தொடர்புமற்ற தமது "பழைய கோட்பாடுகளை" மீள நிலை கொள்ளச் செய்வதே நவஸ்டாலினிஸ்டுகளின் நோக்கமாகும். மக்களின் சுதந்திரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் அடக்குவதும், தொழிலாளர்களின் போராட்டங்களை தடை செய்தல், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைத் தடை செய்தல், பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துதல், அரசியல், விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவற்றில் பல்வேறு கருத்துக்கள் இருப்பதைக் கட்டுப்படுத்துதல்; ஆகியவை இவர்களின் நோக்கங்களாகும். இவர்களின் இந்த நோக்கங்கள் நிறைவேறினால், ஸ்டாலின் 1920களில் அதிகாரத்துக்கு வந்த பொழுது ஏற்பட்ட அனர்த்தங்களே மீண்டும் ஏற்படும்.

நியுடைமஸ்: நீங்கள் இன்னும் முக்கியமான விடயத்தில் பதில் சொல்லவில்லையே. நீங்கள் "பிரஸ்ரொறிக்கா"வை ஆதரிக்கின்றீர்களா?

ஏர்னஸ்ட் மன்டேல்: நான் அந்த கேள்வியைத் தட்டிக்கழிக்க முயலவில்லை. "பிரஸ்ரொறிக்கா" பற்றிய எமது கருத்து; அதை 'ஆகா ஒகோ' என ஆதரிப்பதாகவோ அல்லது ஒரேஅடியாக நிராகரிப்பதாகவோ இல்லை. (ஸ்டாலின் -பிரெஸ்நோவ் ஆட்சியில் இருந்த சோவியத்யுனியன் பற்றிய எமது கருத்துக்கள் போல.). நான், கிரம்லின் பற்றிய ஆய்வாளனுமல்ல, சோவியத் பற்றிய விடயங்களில் மேதாவியுமல்ல. வெளிநாட்டவனாகிய நான், கம்யுனிசத்தின் தீவிர ஆதரவாளனாகவும், அக்டோபர் புரட்சியின் பாரம்பரியங்களை பேணுபவனாகவும் இருந்த போதிலும், சோவியத் யூனியன் போன்ற விசாலமான ஒரு நாட்டில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள் பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்துக்கு முந்திய தீர்ப்பு ஒன்றைச் சொல்லுவது முற்றிலும் அதிமேதாவித்தனமும் முறையற்றதுமாகும் என்றே எண்ணுகின்றேன். அநுமானத்தின் மூலம் நான் சிலவற்றைச் சொல்லலாம், வருங்கால நிகழ்வுகள் அவற்றை சரி அல்லது தவறு என நிரூபிக்கலாம்.

இந்த முறையில் எமது நிலைப்பாட்டை சுருக்கமாக கீழ்வருமாறு கூறலாம்:

"கிளாஸ்நோஸ்ட்"ஐ நாம் முழுமையாக வரவேற்கின்றோம். ஆயுதக்குறைப்புக்காக சோவியத் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள், ஆப்கானிஸ்தானில் இருந்து துருப்புக்களை மீளப்பெற்றமை, கிழக்கயிரோப்பிய நாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட இறமையே இருக்க வேண்டுமென்ற பிரஸ்நோவின் கொள்கையைக் கைவிட்டமை, சீனாவுடன் சுமுக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டமை; இவை எல்லாவற்றையும் நாம் ஆதரிக்கின்றோம்.

மத்திய அமெரிக்க, தென்ஆபிரிக்கா மற்றும் பகுதிகளில் வாழும் மக்களின் போராட்டங்களுக்கும், அவர்களின் சுதந்தரங்களுக்கும், நலன்களுக்கும் எதிரான பிரதேச ஒப்பந்தங்களை ஏகாதிபத்தியத்துடன் ஏற்படுத்துவதையும்; கியூபா, நிக்கரகுவா போன்ற நாடுகளுக்கு செய்து வந்த உதவிகளைக் கட்டுப்படுத்துவதையும்; ஏகாதிபத்திய நாடுகள் சமாதான விரும்பிகளாகவும், நியாயமானவையாகவும் மாறிவிடுமெனவும், மனிதகுலத்தின் பிரச்சனைகளை அவர்களின் ஒத்துழைப்புடன் தீர்க்கலாமென்ற கற்பனைகளை உருவாக்குவதையும் நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அதீதமாக அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்ட "அதிகாரம் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை" பரவலாக்குவதையும், பொருள் விநியோகம், பொதுசேவைகள், சிறு தொழில்கள், விவசாயம் ஆகியவற்றில் "சந்தை" முறையைக் கொண்டுவருவதையும் நாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆழ்ந்த கவனத்துடன் நோக்குகின்றோம்.

தொழிலாளர்களின் சமுகநலன்களுக்கு பங்கம் விளைவிக்க கூடியதும், சமுக ஏற்றதாழ்வுகளை ஏற்படுத்தக் கூடியதுமான பொருளாதார அபிவிருத்திகளை நாம் எதிர்க்கின்றோம்.

வேலையில்லாமையை உருவாக்கும் பொருளாதாரத் திட்டங்கள், "சந்தை"ப் பொருளாதாரம் பற்றாக்குறைகளை நீக்குமென்ற கற்பனைகள்; இவை எல்லாவற்றையும் நாம் எதிர்கின்றோம்.

அதிகாரம் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்திற்குப் பதிலாக "ஜனநாயரீதியான, பரவலாக்கப்பட்ட திட்டமிடப்பட்ட பொருளாதாரம்" என்ற மூன்றவது வழியை நாம் முன்வைக்கின்றோம். நுகர்வோரினால் கட்டுப்படுத்தப்பட்ட பொருள் உற்பத்தியாளர்கள் சுதந்திரமாக தமது உற்பத்தி பற்றியும் வினியோகம் பற்றியும் தீர்மானிக்க் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

"சுயமாக தீர்மானமெடுப்பது" என்றால் என்ன? உதாரணம்: மக்கள் தமக்குகந்த வேலைத்திட்டங்களை தேர்ந்தெடுப்பதும், உற்பத்திகளையும் வினியோகங்களையும்- ஸ்தாபன, கிராம, நகர, தேசிய மட்டங்களில்- தீர்மானிப்பதுமாகும்.

ஆகையினால், பரவலாக்கப்பட்ட(பொருளாதார) திட்டமிடலும் ஜனநாயகமும் அரசியல் சுதந்திரமும் (பன்மையும்) பிரிக்க முடியாதவையாகும். இவையில்லாமல் தொழிலாளர்களின் சுயமான தீர்மானங்களோ அல்லது தொழிலாளர்களின் சுயாட்சியுள்ள அரசாங்கமோ சாத்தியமில்லை.

நியுடைம்ஸ்: ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சியை,- "அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம்" என்று நீங்கள் குறிப்பிடுவதை,- மேற்கு நாடுகளிலும் சில கிழக்கயிரோப்பிய நாடுகளிலும் "சோசலிசத்தின் வீழ்ச்சி"யெனக் கூறுகிறார்கள். இந்தக் கருத்தை

www.tamilarangam.net

நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

ஏணர்ஸ்ட் மன்டேல்: முதலாவதாக; "அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம்" ருஷ்யாவிலும் மற்றைய கிழக்கயிரோப்பிய நாடுகளிலும் நுகர்வோர்களின் (மக்களின்) தேவைகளை, ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்பட்ட அளவில், பூர்த்தி செய்யாவிட்டாலும், திட்டமிட்ட பொருளாதாரத்தின் பயனாக அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்திலும் கலாச்சாரத்திலும் பாரிய வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஒரு சாதாரண சோவியத் பிரஜை, போலிஷ் மற்றும் ஹங்கேரிய விவசாயி - கியுபாவின் தொழிலாளி அல்லது விவசாயி கூட - இன்று அனுபவிக்கும் வாழ்க்கைத்தரம், புரட்சியின் முன் அவர்கள் வாழ்ந்த இழிநிலைகளுடன் ஒப்பிடவே முடியாதளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. சீனாவில் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைத்தர வளர்ச்சி மிக அசாதாரணமானதாகும். இந்த வளர்ச்சியில் சமத்துவமின்மை காணப்பட்டாலும், மேற்கு நாடுகளிலோ அல்லது விசேஷமாக மூன்றமுலக நாடுகளிலோ காணப்படுகின்ற அப்பட்டமான சமூக ஏற்றதாழ்வுகளை இங்கு காண முடியாது. இந்த நல்ல மாற்றங்களுடன் இணைந்திருக்கும் அரசியல் சுதந்திரமின்மையே கண்டிக்கப்பட வேண்டியதாகும். திட்டமிட்ட பொருளாதாரத்திற்கும் அரசியலடக்கு முறைக்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது.

இரண்டாவதாக; - இதுவே மிக முக்கியமான விடயமென நான் கருதுகிறேன் - சோசலிச இயக்கத்தின் வளர்ச்சியானது, சில நாடுகளின் அல்லது அரசாங்கங்களின் "பொருளாதார முன்னேற்றங்களிலும் பரிபாலன திறமைகளிலும்" தங்கியிருக்கவில்லை. எதிர்காலத்திலும் அது அப்படியிருக்கப் போவதில்லை.

இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் சுரண்டலும் ஒடுக்குமுறையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அநீதிகளும் நிலவும் வரையில், இந்த சமூகத்தை புதியதொரு அமைப்பாக மாற்ற வேண்டுமென்ற கொள்கைகளில் நம்பிக்கைகள் இருக்கும் வரைக்கும், சோசலிசம் என்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இந்தக் கொள்கைகளிலுள்ள நம்பிக்கைகளின் விளைவாக; பணப்பித்து, போட்டி, பரஸ்பர குரோதம் நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக ஒற்றுமை, கூட்டுறவு, சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கக் கூடிய பொருளாதார சக்தியும் அமைப்பாகும் வல்லமையையும் கொண்ட சமூக வர்க்கத்தினால் புரட்சிகரப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகும். இதை முன்னெடுக்கக்கூடிய வர்க்கம் பாட்டாளி வர்க்கமாகும், பொதுவாகச் சொல்வதானால் சகல கூலித் தொழிலாளர்களும் இதிலடங்குவார்கள்.

சோசலிசத்திற்கான இந்தக் காரணிகள் முன்னெப்பொழுதையும் விட அதிக நம்பிக்கையூட்டுவனவாகவே உள்ளன. சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் ஒரு எதிர்காலம் உண்டு என்பதிலும் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

மனிதர்கள் இழிவுபடுத்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, வெறுக்கப்பட்டு வாழுகின்ற ஒரு சமூக அமைப்பானது மாற்றப்பட வேண்டியது அவசியம் என்று மார்க்ஸ் கூறினார். ஸ்டாலினும் அவரைப் போன்றவர்களும் சோசலிசகோட்பாடுகளை பலியிட்டு சந்தர்ப்பவாத சர்வதிகாரங்களை உருவாகிய குற்றங்களைப் புரிந்தார்கள்.

எந்தச் சிந்தனைகளால் சோசலிசம், கம்யூனிசம் ஆகியவை உருவாக்கப்படனவோ, அதே சிந்தனைகளுக்கு நாம் மீண்டும் செல்வோமானால் அவை மறுதலிக்க முடியாதவையாகவே இன்றும் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேரினவாதமும்- புலி இயக்கமும், இடதுசாரிகளும்.

ப.வி.ஸ்ரீரங்கன்

பூமிப்பந்தின் பல பாகங்களில் உயிரின உருவாக்கம் சாத்தியப்பட்டதும், பரிணாமத் திசைவழியில் கூர்ப்படைந்து மனிதர்கள் உருவாகிய போது, அவர்கள் தோன்றிய சூழல் நிறபேதங்களையும், மொழிவேற்றுமைகளையும் சாத்தியப்படுத்தும் வண்ணம் நிறமும், மொழியும் பல வகைகளில் உருவாகின.

குறிப்பிட்ட ஒரு மொழியை பேசியவர்கள் கூட்டாக தமது உழைப்புச் சக்தியை பயன்படுத்தி உயிர்வாழ நேரிட்டு அதற்கிசைய சமூகமாக- குழுவாக வாழ்ந்தபோது அவர்கள் வாழ்ந்த நிலப்பரப்புகள் அவர்தம் ஆளுமைக்குள் கொண்டுவரப்பட்டன. இவ்வித இயக்கப்பாட்டில் உருவாகிய இனக்குழுக்கள்- மக்கள் இனங்கள் பின்பு சமூகவளர்ச்சிப் போக்கில் ஒரு ஆளுமைக்குள் நிறுவியபோது தேசிய இனங்களாக உருவாகும் நிலையை அடைந்தன.

இவ்விதமே பல்லின மக்கள் ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள்- ஒரு ஆளுமைக்குள் வாழவேண்டிய நிலையை சமூக வளர்ச்சிப் போக்கு சாத்தியப்படுத்தியது.

பல்லின மக்கள் வாழும் ஒரு தேசத்தில் பொருளாயுதநிலமைகள் மிகவும் சிக்கலான முறைகளிலேயே நிலவுகின்றன; இன்றைய சமூக வளர்ச்சிக்கட்டத்தில்- விசும்பிலிருக்கும் முதலாளித்துவ உற்பத்திப் பொறிமுறை அதன் செயல்முறையில் இனங்களுக்கிடையிலான பாகுபாட்டை- முரணியல்புகளை அளவு ரீதியில் அசாத்தியமான வளர்ச்சிக்கிட்டுச் சென்று பண்புரீதியான செயலாக்கத்தை நிறைவு படுத்தி வருகிறது.

www.tamilarangam.net

இலங்கையிலின்று நடக்கின்ற அசம்பாவிதங்களுக்கு காரணங்களை தேடுமிடுத்து- பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில், இனங்களுக்கிடையிலான முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்படும் சமமின்மை ஒரு இனத்தை, இன்னொரு இனம் பலி கொள்ள அடக்கியொடுக்க- சுரண்ட அல்லது அவர்களது பொருளாதார விழுமியங்களை கையகப்படுத்துவதற்கு எத்தனிக்கும். இத்தகைய இயக்கப்பாட்டை விளங்கிக்கொள்ள இன்று, இலங்கை அரசியலே உதாரணமாகிவிட்டது.

இலங்கையில் இன்று நடைபெறும் இனப்பிரச்சனைக்கு அடிப்படையான காரணத்தைத் தேடினால் அது, இனங்களுக்கிடையிலான முதலாளித்துவ வளர்ச்சியே காரணம் என்பதை சகல பொருளியலாளர்களும் இலகுவாக அறிய முடியும்.

காலனியத்திற்கு முன்பு, நிலவிய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புமுறை காலனியத்தில் ஒரு சமூக உருவாக்கமின்றி அதன் முரண்பாட்டிலெழும் பொருளாதார உற்பத்தி உறவுகளின்றி இலங்கையில் ஒரு தேக்கச் சமூகப் பொருளாயுத உறவுகள் நிலவினது. காலனியத்தைச் சிதைத்து, நவகாலினியத்தை நிறுவி அமெரிக்கா தன்னை வல்லரசாக்க முனைந்தபோது காலனிய நாடுகள் நவகாலனிய நாடுகள் பொருளாதார அமைப்புக்குள் விழுந்தன.

இந்நிலையில்தாம் இலங்கையில் ஒரு சார்பு முதலாளித்துவ சமூக அமைப்பு உருவாக்கப்பட்டது. இயல்பான சமூகவளர்ச்சியின் விசும்பு நிலையில்- சமூக உருவாக்கம் நிகழ்ந்து அதன் எதிர் நிலைகளால் உருவாக வேண்டிய முதலாளித்துவத்தை இலங்கையில் காலனியம் தடுத்து வந்தது. இந்நிலையால் காலனியம் சரிந்து பெயரளவிலான அரசியல் சுதந்திரம்(பொருளாதாரமில்லை) பெற்ற இலங்கை, இவ் நிகழ்வுப் போக்கை ஏகஇனத்திற்கான கையகப்படுத்தும் திசை வழியில் சென்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை நாட்டை மாறி மாறியாண்ட ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் சிங்கள ஆளும் வர்க்கத்தினது நலன்களைப் பிரதிபலிக்கும் பொருளாதாரப் பொறிமுறைகளையே கையாண்டார்கள். இதன் வாயிலாக இலங்கையில் ஒரு தேசிய இன உருவாக்கத்தினூடாக தேசிய முதலாளித்துவத்தை உருவாக்க முனைந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பெரும் தேசியவாதத்தை நாசுக்காகச் செயலாக்கி அதன் வளர்ச்சியோடு பேரினவாதத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் கையகப்படுத்தியது. (இத்தகைய கட்சியைத் தாம் இலங்கையில் தேசிய பொருளாதாரத்தை நிறுவ முனைந்த ஓரளவு முற்போக்குக் கட்சியென்று நம்மில் பலர் நம்பி வருகிறோம்.) ஆனால், S.L.F.Pயின் ஆட்சி கவிழ்ந்ததும் U.N.P அரியணை ஏறி தேசிய முதலாளிய உருவாக்கத்தை மட்டும் தகர்த்து- ஏகாதிபத்தியத்திற்குச் சார்பாக, தேசிய இன உருவாக்கத்தோடு சார்பு முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும்- அதன் வளர்ச்சியோடு பெரும்தேசிய வாதத்தையும் வளர்த்தெடுக்க, பெரும்தேசியவாதமானது தன்னுடன் சேர்த்து பேரினவாதத்தின் வளர்ச்சியையும் பாதுகாத்துக் கொண்டது.

பேரினவாதம்:

இன்று, இலங்கையிலுள்ள சிங்களம் பேசும் உழைப்பாளிய மக்கள் தம் பிரச்சனைகளுக்கு- அன்றாட வாழ்க்கைத் துன்பங்களுக்கு நேரிடையான காரணங்களை அறிந்து கொள்ளாதிருக்க இப், "பேரினவாதம்" இலங்கை ஆளும் வர்க்கத்திற்கு உதவியாக இருக்கிறது.

இலங்கையின் ஏகக்குடிமக்கள் சிங்களம் பேசும் மக்களாகப் பறைசாற்றும் பேரினவாதத்தின் சாரம்ஸம், தமிழ் பேசும் மக்களை சிங்களம் பேசும் மக்களுடனும்; சிங்களம் பேசும் மக்களை தமிழ் பேசும் மக்களுடனும் ஐக்கியமாகாமல் தடுத்தே வருகிறது. இதனால், இவ்விரு மக்களிடமும் பாரியஇடைவெளிகளை ஆளும் வர்க்கம் உருவாக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடடிருக்கிறது.

இப்பேரினவாதமானது, இலங்கைச் "சார்புமுதலாளித்துவத்தை" தூக்கி நிலைநிறுத்துவதற்கு ஒத்துழைக்கின்றது. வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை திசை திருப்பும் கைங்கரியத்தை இது செய்துவிடுகிறது. இவ்வித இயக்கப்பாட்டால் தென்னிலங்கையிலும், வட-கிழக்கு இலங்கையிலும் முற்போக்கு சக்திகளின் வளர்ச்சி ஸ்தம்பித்துள்ளது; இனவாதக் குழுக்கள் மேலெழுந்துஉழைக்கும் மக்களை தமது நலன்களுக்கொப்ப பயன்படுத்திச் சீரழிக்கிறார்கள். பேரினவாதம் நிறுவன மயப்படுத்தப்பட்டு- ஆளும்வர்க்க முரண்பாடுகளை திசை திருப்ப மக்களிடம், விதைக்கப்பட்டுவிட்டது. இலங்கையில் பேரினவாதம் மாளாது போனால் அல்லது, வீழ்த்தப்படாமல் அங்கு, இனங்களுக்கிடையிலான முற்போக்குக் கருத்துகளைப் பாச்சமுடியாது என்பது நிதர்சனமாகும்.

பாசிசப்புலிகள்:-

"பாசிஸம்" எனற கருத்தின சொல்வாக்கத்தை புலிகளுக்கும் பயன்படுத்தலாமா என்ற கேள்வியும் கையோடு எழுகிறது. எனிலும், புலிகளின் செயற்பாடுகள் அவர்கள் சீரழிந்த இனக்குழுவாகி- பயங்கரவாதத்தின் ஊற்று மூலங்களாக மாறியதால் அவர்களை பாசிஸவாதத்திற்குள் அடக்க முடியும்.

இலங்கையில், தமிழ் பேசும் மக்களை பொருளாதார ரீதியாகவும், இனரீதியாகவும் சுரண்டும் சிங்கள- தமிழ் ஆளும் வர்க்கங்கள் 'தமது, எஜமான்களுக்கு(ஏகாதிபத்தியம்) நன்றி விசுவாசமாக நடந்தும் கொள்கின்றன. நாட்டைப் போண்டியாக்கும் பொருளாதாரக் கொள்கை; ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கொப்ப நாட்டின் அரசியல்

www.tamilarangam.net

தலமைகள்; உள்நாட்டு இனங்களுக்கிடையிலான பிரச்சனைகளை தமது நலன்களுக்காக கைக்கொள்ளும் இராஜதந்திரம். இது இலங்கையின் சிங்கள- தமிழ் ஆளும் வர்க்கத்தினது தேசவிரோதச் செயல்களாகும்.

தமிழ் பேசும் மக்களினது "தேசிய இனப் பிரச்சனையை மையமாக வைத்து, தமிழ் பேசும் மக்கள் மத்தியில்" முகிழ்த்த ஆயுதக்குழுக்கள் தமிழ் பேசும் மக்களினது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் காப்பதற்கு "தனித்தமிழீழம்" என்று முன்வைத்து போராடி, சரியான இலக்கின்றியும், மக்களை அரசியல் ரீதியாக- சித்தாந்த ரீதியாக ஸ்தாபனமயப்படுத்தாததாலும்- மக்களிடமிருந்து அன்னியமாகி ஆயுதக் குழுக்களாக சீரழிந்து அன்னிய சக்திகளுக்கு வாலாட்டும் செல்லப் பிராணிகளாக மாறிப்போனார்கள், இந்த ஆயுதக்குழுத் தலமைகள்.

இலங்கையில், உதட்டளவில் மார்க்சியக் கண்ணோட்டத்துடன் தமிழ் பேசும் மக்களினது பிரச்சனைகளை அணுகிய போராட்டக்குழுக்கள் நாளாவட்டத்தில் தமது சாயம் வெளுத்துச் சீரழிந்து போனார்கள். இப்படியான பல குழுக்களை தலையில் தூக்கி வைத்து புகழும் முற்போக்காளர்களும் நம் மத்தியில் இன்றும் இருக்கிறார்கள்.

சிங்கள ஆளும் வர்க்கத்தினால் தமிழ் தேசிய இனம் அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படுவதால் அதை எதிர்த்து போராடும் நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் தயாரானார்கள்; வர்க்கப் போராட்டம் செய்தார்கள் என்று கூறிக்கொண்டு உண்மைகளை மறைப்பது ஊனமானதாகும். சிங்கள பேரினவாத அரசினால் தமிழ் பேசும் மக்கள் அடக்கியொடுக்கப்பட்டதற்கான சூழ்நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுத்ததும் தமிழ் பேசும் உடமை வர்க்கமேயாகும். இப்படிச் சொல்வதால் சிங்கள பேரினவாத அரசை நியாயப்படுத்தி விடுவதாக அர்த்தங்கொள்ளப்படாது.

www.tamilarangam.net

இன்று, இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சனைகளில் சிங்கள ஆளும் வர்க்கங்கள் தமது எஜமானர்களினது ஆலோசனைப்படி நடந்து கொள்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்கள் மீது கொடுமையாக நடாத்தப்படும் இன ஒடுக்குமுறையால் இலாபமடைந்தவர்கள் தாம் "பாசிசப்புலிகள்" குழுவாகும். தமிழ் பேசும் மக்களுக்கு தேசிய வெறியை- இனவெறியை ஊட்டி அவர்களது எழுச்சியில் தமது உடமை வர்க்க நலன்களைக் காத்துக் கொள்ள முயன்ற தமிழ் பேசும் ஆளும் வர்க்கத்தினது காவற்படை தாம் புலிகளாகும். ஆனால், இன ஒடுக்குமுறையில் தத்தளிக்கும் மக்களினது பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதாகவும்- சுயநிர்ணய உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் பீற்றிக் கொண்டு "புலிகள்" அம் மக்களுக்கெதிராகவே இதுவரை காலம் செயல்பட்டுவருவதை தமிழ்பேசும் உழைப்பாளிய மக்கள் அறியமுடியாத வகையில் தேசியவாதம் நிலைநிறுத்தப்பட்டு, தேசிய விடுதலைக் கோஷம் தமிழ் பேசும் மக்களின் அறிவை முடக்கி வைத்துள்ளது.

இலங்கையின் பேரினவாதத்தின் மீதும், தமிழ் மக்களினதும் உரிமைகள் மீது 'ஒடுக்கும் வர்க்கம் நடாத்திய காட்டு மிராண்டித்தனங்கள் மீதும் கண்ணிவைத்த புலிகள், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சிறுபான்மை இனவாதத்தை விதைத்து தம்மை ஸ்திரப்படுத்தியுள்ளார்கள்.

தமிழ் தேசியவாதத்தினூடாக ஏழை எளிய அப்பாவி மக்களின் குழந்தைகளான "குஞ்சு குருமான்களை" புலிகள், கட்டாயமாகப் பிடித்துச் சென்று இப்போது, இலங்கை இராணுவத்திற்கு இரையாக்கி வருகிறார்கள். அந்த அப்பாவி மழலைச்செல்வங்கள் ஏதுமறியாது, தமதுயிரை தமிழ் மக்களினது உரிமைக்கு அர்ப்பணித்துக் கொள்வதாகவே எண்ணி மடிந்து போகிறார்கள். ஆனால், அவ்வுயிர்களின் அழிவில் புலிகளின் சூத்திரதாரிகள் இலங்கை அரசுடன்

www.tamilarangam.net

பேரம் பேசுவது பின்பு, சரிவரவில்லையெனில் மீண்டும், உயிர்பலிக்கு மழலைகளையனுப்பி இலங்கை இராணுவத்துடன் மோதவிட்டு பின்பு, பேரத்தைத் தொடங்குவது. இப்படியாக இயங்கிக் கொண்டிருக்கும் புலிகளுக்கு குறுக்கே வந்து மக்கள் உரிமைகளைப் பற்றியும், புலிகளின் அராஜகத்தைப்பற்றியும் விளக்கி உண்மைகளை மக்களுக்கு அம்பலப்படுத்தி மக்களின் நலனுக்காக குரல் கொடுக்கும் முற்போக்கு சக்திகளை புலிகள் தமிழ்மக்களின் விரோதிகளெனக் கூறி அழித்தொழிக்கிறார்கள்.

இவ்விதமான அழித்தொழிப்புக்கு நியாயம் கற்பிக்கும்படி புலிகளின் மேற்குஜேர்மன் பிரிவால் வெளியிடப்படும் "செய்திக்கதிர்" என்ற பிரச்சார ஏட்டில் 30.06.90 இல் இப்படி எழுதுகிறார்கள்:- "நாம் எந்த சக்தியின் துணையுடனும் நின்று போராடவில்லை. எமது மக்களின் துணையோடு போராடுகிறோம். அதனால் நிமர்ந்து(?) நிற்கிறோம். இன்று, உலகில் வாழும் 8கோடி (எட்டுக்கோடி) தமிழ் மக்களுக்கும் ஓர் நாடு கிடையாது. தமிழீழம் என்பது முடிந்த ஒரு முடிவு. எமது இலட்சியத்திற்கு(?) குறுக்கே எந்த சக்தியும் வருவதை நாம் அனுமதிக்க மாட்டோம். எமது மக்கள் தான் எமது பலம். நாளை அமையப் போகும் நமது தேசத்திற்காக ஒன்றிணைந்து போராடுவோம்." (-பிரபாகரன்.வே. செயதிக்கதிர் பக்கம்.4; 30/06/90)

இங்கு தாம் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அவர்களது இலட்சியமான அழித்தொழிப்பு அரசியலுக்கு குறுக்கே வந்து மக்கள் அழிவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் குரல் கொடுப்பவர்களுக்கும் புலிகள் அனுமதியளிக்கப் போவதில்லை என்பதை செயலிலும் காட்டிவிட்டார்கள். ஆம்! கலாநிதி (மருத்துவ) ராஜினி திராணகம வுக்கு அவர்கள் மூலம் நடந்த கோழைத்தனமான கொலை. மக்களின் ஜனநாயக விழுமியங்களைக் காப்பாற்றத் துடிக்கும் அனைவருக்கும் சவாலாகவுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாசிசப் புலிகள், ஈழமண்ணில் தம்மைத் தவிர மக்கள் மத்தியில் வேறு முற்போக்கு அமைப்புகள் வளர்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதுவாயி, புலிகளுக்கு கொஞ்சமும் சளைக்காமல் அராஜகம் புரிந்த சகல ஆயுதக் குழுக்களையும் காரணம் காட்டி முற்போக்கு சக்திகளை ஒடுக்குகிறார்கள். தங்களைத் தவிர வேறு எவரையும் அனுமதிப்பதில்லையாம். இதற்கு, லெனினையும், மாவோவையும் துணைக்கழைக்கிறார்கள் பாசிசப்புலிகள்.

அதே 30.06.90 செய்திக்கதிர் பக்கம்:5 இல் பெட்டிச் செய்தியாக இப்படியொரு செய்திவருகிறது: "பெரும் புரட்சிகளை நடத்தி விடுதலையை அறுவடை செய்த உலகின் இரு நாடுகளான சோவியத்திலும்- சீனாவிலும் ஒரு கட்சியே அப்புரட்சியை முன்னெடுத்துச் சென்றது; வெற்றிகண்டது. அப்புரட்சிகளில் மக்களை வழி நடத்திய தலைமைகளான லெனின் மீதும், மாசேதுங் மீதும் பொறாமைப்பட்டோர் அவர்களுக்கெதிராக முரண்டு பிடித்தோர் இருந்தனர். ஆனால் சேட்டைகள் எதுவும் பலிக்கவில்லை".

புலிகள் தமது ஒரு கட்சி தனிக்காட்டுராஜ தர்பாருக்கு- சர்வதிகாரத்துக்கு நியாயம் கற்பிக்க, மக்களுக்காக- உழைக்கும் மக்களுக்காக "மார்க்சிய" தத்துவார்த்தப் பாதையினூடாக சமவுடமைப் பொருளாதார கொள்கையுடைய ஒரு கட்சி மூலம் மக்களை அணிதிரட்டி ஆளும் சுரண்டும் வர்க்கத்துடன் போரிட்டு சமவுடமை ஆட்சியை நிறுவியவர்களான லெனினையும், மாவோசேதுங்கையும் தமது குறுகிய நோக்கிற்காக பயன்படுத்துவது எவ்வளவு போலியானது என்பதற்கு புலிகளின் சமூகப் பொருளாதாரக் கொள்கையே சான்று.

இதே பாசிசப்புலிகள் தமது, மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து குரல் கொடுக்கும் முற்போக்கு சக்திகளை லெனினுடைய- மாவோவினுடைய கட்சிகளுக்கு எதிராகச் செயல்பட்ட எதிர்புரட்சிச் சக்திகள் போன்றும், தாம் (புலிகள்) லெனினுடைய- மாசேதுங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றவர்களின் மக்கள் விடுதலைக் கட்சிகள் போன்ற விடுதலைக் கட்சியே என்று மக்கள் மத்தியில் விளம்பரம் செய்கிறார்கள்.

மக்கள் மீது பாசிச தாக்குதல்களையும், கொடூரங்களையும் புரியும் புலிகள் தம்மை மக்களிடமிருந்து அந்நியப்படாது பாதுகாக்க லெனினையும், மாவோவையும் துணைக்கழைக்கிறார்கள்.

இத்தகைய செயலுக்கும், இரண்டாவது உலக மகா யுத்தத்தில் "கிட்லரின்" பிரச்சாரத் தலைவன் "கொய்பில்ஸ்"சக்கும் அவன் நடவடிக்கைக்கும் வித்தியாசமில்லை.

இப்போது, மேற்குலகில் பாசிசப் புலிகளும் மற்றைய பல சீரழிந்து ஆயுதக் குழுக்களும் செய்யும் பிரச்சாரங்கள் "கொய்பிள்சின்" பிரச்சாரத்திற்கு கொஞ்சங் கூட குறைந்ததில்லை.

இடதுசாரிகள்

தேசிய விடுதலைப் போராட்டங்கள் சாரம்சத்தில் தேசிய, முதலாளித்துவத்தின் கோட்டைகுள்ளிருந்து வெளிப்படுபவையாகும். இப்படித்தாம் எமக்கு, மார்சிய விளக்கங்கள் தருகின்றன. லெனின் கூறுகிறார்:- "தேசிய விடுதலை போராட்டங்கள் சாரம்சத்தில் தேசிய முதலாளித்துவத்தின் நலன்களைப் பிரதிபலித்தாலும் நாம், அதிலுள்ள இன ஒடுக்குமுறையை அங்கிகரிக்கவேண்டும்; இன ஒடுக்குமுறைக்கு எதிராக நடக்கும் போரை ஆதரிக்க வேண்டும்." இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட தளத்தை சமூகமாற்றத்தை வேண்டி நிற்கும் சக்திகள் கையகப் படுத்தவேண்டும் என்பது தான் சாரம்.

இலங்கையில் நடைபெறும் இன ஒடுக்குமுறைக் கெதிராக தேசிய விடுதலைப் போராட்டமும் அதன் வாயிலாக முன்வைக்கப்படும் தமிழ் தேசியவாதம்; தமிழ் உணர்வு; சுயநிர்ணயவுரிமை போன்றவாதங்கள் "வர்க்கப் போராட்டத்தை" மழுங்கடிப்பதாக பார்க்கின்ற பார்வை கோணலாகும்.

www.tamilarangam.net

இன்றைய, ஏகாதிபத்திய சகாப்தத்தில் மூன்றாமுலக நாடுகளின் வர்க்கப்போராட்ட மையம், இனவிடுதலையுடன் தாம் கருக்கொண்டிருக்கிறது. பல்லின மக்கள் வாழும் மூன்றாமுலக நாடுகளில் இனங்களுக்கிடையிலான முதலாளித்துவ வளர்ச்சி இன ஒடுக்கு முறையைக் கூர்மைப்படுத்தியுள்ளது. ஆயினும், இவற்றுக்குத் தூண்டுதலாக ஏகாதிபத்தியங்களின் நலன்களையொட்டிய தூண்டுதல்களுமிருப்பதால் இனஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்தை சமூகமாற்றம் வேண்டி நிற்கும் சக்திகள் கையகப் படுத்தவேண்டும்.

ஆனால், இலங்கையில் உள்ள முற்போக்கு இடதுசாரிகள் தேசிய விடுதலைப் போருக்கு மரபு ரீதியான அர்த்தத்தை கற்பித்துவிட்டு அதிலுள்ள நியாயமான- முற்போக்கான ஒடுக்குமுறைக்கெதிரான அம்சங்களைகொச்சைப்படுத்தி வந்துள்ளார்கள். இலங்கையில் உருக்கொண்ட கம்யூனிஸக்கட்சிகளின் சித்தாந்தத்தளம் "ரொட்கிஸமாகும்". இச் சித்தாந்தப்போக்கு எவ்வளவுக்கெவ்வளவு பாட்டாளிகளை ஏகாதிபத்தியங்களுக்கு காட்டிக் கொடுத்துள்ளது.

இன்று, இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகள் புதிய புரிதல்களுடன் பிரச்சனைகளை அணுகி மக்கள் மத்தியில் செயலாற்ற முடியாத வகையில் புலிகளினதும், இலங்கை அரசினதும் பாசிச நடவடிக்கைகள் தலைவிரித்தாடுகின்றன.

இந்தியாவில், காலனியாதிக்கெதிராக நடந்த போராட்டத்தில் "புலிகளை"ப்போன்று சர்வதிகார காந்தியின் தலைமையில் காங்கிரசுக்கட்சி மும்மரமாக தேசிய விடுதலைப் போரை கையகப்படுத்தி மக்கள் மத்தியில் செயலாற்றிய போது இந்திய கம்யூனிஸ்ட்டுகள் அவ்விடுதலைப் போரை முதலாளிகளினது போராட்டமென கொச்சைப்படுத்தி நிராகரித்த போது இந்திய தேசியவாதம் கம்யூனிஸ்டுகளை மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் தேசியத்தை காங்கிரசின் பிற்போக்கு தேசியமாக்கியது. இப்போது, காங்கிரசுக்கு பின்னால் கம்யூனிஸ்டுகள் தேசியகீதம் பாடுகிறார்கள்.

இவ்வித நிலமைதாம் இன்றைய முற்போக்கு சக்திகளுக்கு இலங்கையில் நிகழ்ந்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிச புலிகளின் பிற்போக்கு நடவடிக்கையும், தேசியவாதமும் அவர்களை (பாசிசப்புலிகளை) மக்கள் போராட்டக் குழுவாகவும் காட்டி நிற்கிறது.

மேற்கு ஐரோப்பாவிலும், புலிகளினதும் போலிப் பிரச்சாரங்களும்,தேசியவாதக் கோஷமும், பாசிச நடவடிக்கைகளும் இங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் புதிய புரிதல்களை அடித்து வீழ்த்திவருகிறது.

ஐரோப்பாவில் வசியும் முற்போக்கு சக்திகளினது பிரச்சாரங்களை மிகவும் சாதுரியமாக பாசிச புலிகள் எதிர்கொள்கிறார்கள்.

"சஞ்சிகை" தளத்தில் மட்டும் ஐரோப்பா வாழ் முற்போக்குச் சக்திகள் செயலாற்றி வருவதால் அவர்களது நோக்கு நிலை சார்ந்த நடவடிக்கைச் சார்ந்த செயனுக்கங்கள் ஒரு கட்டத்திற்குமேல் நகரமுடியாமல் ஸ்தம்பித்துள்ளன. இதனால், பலர் மனவிரக்திக்கு ஆளாகியுள்ளார்கள்.

இவ்விதப் போக்கை தவிர்க்க வேண்டுமாயின் புதிய ஊடகங்களை கண்டுபிடித்து மக்கள் மத்தியில் செயலாற்ற வேண்டிய வரலாற்றுத் தேவை இங்குள்ள முற்போக்குச் சக்திகளின் தலையில் விழுந்துள்ளது என்பதை நிராகரித்துக் கொண்டிருப்போமானால் "பாசிசப்புலிகள்" மக்களை சுடுகாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதைத் தடுப்பது கடினமானது மட்டுமல்ல, நம்மை நாமே அந்நியப்படுத்திக் கொள்வோம்.

www.tamilarangam.net

# சிதைந்த சித்தாந்தங்களும் சீரழிந்த இயக்கங்களும்

எல்.ஜீவராஜா

"சிதைந்த சித்தாந்தங்கள்" என்ற ஒரு சிறு நூல் சமீபத்தில் கைககளில் கிடைத்தது. சமூக விஞ்ஞான கலை இலக்கிய கழகத்தின் வெளியீடெனக் குறிப்பிடப்பட்டிருந்ததால், ஆழமான சித்தாந்த ஆய்வுகளைக் கொண்டிருக்குமென்ற ஆவலுடன் பக்கங்களைப் புரட்டினேன். ஆனால் பதிப்புரை இந்த ஆவலை தடுத்து நிறுத்தி, இது ஒரு வரலாற்று நூல் என்று அறிவுறுத்தியது.

தமிழ்போராளிகள் இன்று வரலாற்றை அறியாதவர்களாக இருக்கின்றார்கள், உதாரணமாக "திரு. எல்.ஜே.வி. செல்வநாயகம் பற்றியே அறியாதவர்களாக இருக்கின்றார்கள்..." என அதில் கூறப்பட்டிருந்தது. இது உண்மையாக இருக்கலாம்! சில சமயங்களில் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுபவர்களும் அந்த நிலையில்தான் இருக்கின்றார்கள்!! சமீபத்தில் வாசித்த கட்டுரையொன்றில் "சேர்.பொன்.இராமநாதனின் ஐம்பதுக்கு ஐம்பதிலிருந்து..." என்று வரலாற்றையும் வாசகர்களையும் குழப்பியிருந்தார்!![1] இதை வாசித்த பொழுது பதிப்புரையில் கூறப்பட்ட உண்மை விளங்கியது ஆனால்... உள்ளே அறிந்த வரலாற்றில் ஒரு பகுதி சொல்லப்படுகின்றது...மறுபகுதியையும் சொல்லியிருக்க வேண்டும். அவற்றுக்கு வருத்தம் கூடத்தெரிவிக்கப்படவில்லை! சில இடங்களில் எழுதியவர்களின் குழப்பநிலை வெளிப்பட்டு நிற்கின்றது.

தனிநபர் பயங்கரவாதம், ஆயுத மேலாதிக்கம் பற்றியெல்லாம் எழுதியிருப்பவர்கள் இறுதியில் "தமிழ் இயக்கங்களின் முக்கிய செயற்பாடுகள்" என தனிநபர் கொலைகள், கொள்ளைகள்,..( TELA



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின் யாழ்தேவி எரிப்பு உட்பட).. அடங்கிய ஒரு பட்டியல் தருகிறார்கள்! புளொட் இயக்கத்தின் செயற்பாடுகள் என மாலைதீவில் நடைபெற்ற நிகழ்வுகளை "மலைதீவுப்புரட்சி" என்று பெயரிட்டிருக்கின்றார்கள். இதை புளொட் இயக்கம் மறுத்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்த நிகழ்விற்காக திரு.சித்தார்த்தன் சமீபத்தில் மலைதீவுப்பிரதிநிதியிடம் கவலை தெரிவித்ததுள்ளது கவனிக்கத்தக்கது.) இந்த நூலின் ஆசிரியர்கள் மாலைதீவில் ஏற்பட்ட நிகழ்வுகளை "புரட்சி" என்று எந்த சித்தாந்த அடிப்படையில் நோக்குகின்றார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

"சிதைந்த சித்தாந்தங்கள்" என்ற வாசகம் இன்று முதலாளித்துவ தொடர்பு சாதனங்களில் கம்யூனிச சித்தாந்தம் சிதைந்து விட்டது என்ற அர்த்தத்தில் பாவிக்கப்பட்டு வருவதையும் காணக்கூடியதாகவிருக்கின்றது. ஆனால் அந்த அர்த்தத்தில் இந்த நூலின் பெயர் இடப்படவில்லை என எண்ணுகிறேன். மறு புறத்தில் சோசலிசத்தைச் சீரழித்த ஸ்டலினிசமும் அதைத் தொடர்ந்த மாவோவாதமும் கடைப்பிடித்த தனிக்கட்சி சர்வதிகாரம், தனிநபர் வழிபாடு போன்ற நடைமுறைகள் தமிழீழ விடுதலை இயக்கங்கள் சீரழிவதற்குக் காரணமாகவிருந்தனவா என்பது பற்றிய ஆய்வு இந்த நூலில் மேற் கொள்ளப்படவில்லை. புரட்சிகரசக்திகளினுள் ஊடுருவிய குட்டி முதலாளித்துவ அதிகாரத்துவங்கள் உருவாக்கிய "சீரழிந்த சித்தாந்தங்களை" மார்க்சிய லெனினசம் என்று நம்பிய இயக்கங்களில் ஏற்பட்ட தனிநபர் வழிபாடு (இயக்கத்தலைவர்களுக்கும் அவர்களின் படங்களுக்கும் வணக்கம் செலுத்துவது, ஊர்வலம் எடுப்பது), கருத்துச் சுதந்திரத்தை வளர்த்து உட்கட்சி ஜனநாயகங்களைப் பேணாதபடியினால் நடைபெற்ற உட்கொலைகள், தனிஒரு கட்சியே புரட்சி செய்து சர்வதிகாரம் நடத்த வேண்டுமென்ற கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட சகோதர இயக்கத்தவர்களின் படுகொலைகள்; இவைகள் இந்த

www.tamilarangam.net

சித்தாந்த சீரழிவினால் ஏற்பட்ட விளைவுகளா என்பதை ஆய்வு செய்வது இன்று மிக மிக அவசியமானதொன்றாகும்.

வளர்ச்சியடையாத அரைநிலப்பிரபுத்துவ, குட்டிமுதலாளித்துவ சக்திகளினாலேயே தனிமனிதர்களை தெய்வமாக வழிபடுதலும், அவர்களின் சர்வதிகாரங்களும் "புரட்சி" என்ற பெயர்களில் பேணப்படுகின்றன. தொழிலாள வர்க்கத்தின் சோசலிச ஜனநாயகத்திற்கும் இதற்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது.

ஸ்ரீலங்கா அரசினது தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கெதிரான முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல்கட்சிகளின் போராட்டங்களை பொறுப்பேற்றுக் கொண்ட விடுதலை இயக்கங்கள் அந்த முதலாளித்துவக் கட்சிகளின் வேலைத் திட்டங்களிலிருந்து எள்ளளவும் மாறுபடவில்லை என்பதையே கடந்த கால வரலாறுகள் எமக்குக் காட்டி நிற்கின்றன.

"இந்தியாவிற்கு ஜின்னா, இலங்கைக்குப் பொன்னா" என்று கோசமெழுப்பி தமிழ் மக்களை தான் தனித் தமிழ் "பாக்கிஸ்தான்" எடுக்கக்கூடியவன் என்று ஏமாற்றி தன்னுடன் இருந்து பிரிந்த தமிழரசுக்கட்சியினரின் கூட்டங்களையும் குழப்பி, "தமிழருக்கு ஒரு தனிநாடு வந்தால் அதையும் இந்தப் பொன்னன் கொண்டுவருவான்"என்று கொக்கரித்தார் ஜி.ஜி.பொன்னம்பலம்.

ஏகாதிபத்திய மற்றும் இஸ்ரேல் புகழ் பாடிய (மோசாட் உறவு புதியதல்ல) தமிழரசுக்கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் நாம்தான் தமிழ் மக்களின் தனித்தலைவர்கள் என்று பிரகடனம் செய்து, துரையப்பா படுகொலையிலிருந்து சுந்தரம் படுகொலை வரை கொலையாளிகளைத் தட்டிக்கொடுத்து தனியாட்சி நடத்தத் திட்டமிட்டனர்!

இவர்கள் வழிவந்த விடுதலை இயக்கங்களின்(எல்.ரி.ரி.ஈ, புளொட், டெலோ) தலைமைகள் இவர்களின் வேலைத்திட்டங்களிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறுபடுவது கடினமாகவே இருந்தது.

ஒருபுறத்தில் போராட்டம் பின்பு திரைமறைவில் பேச்சுவார்த்தை என்ற வட்டத்திற்குள் தமிழ் மக்களின் அரசியலை உள்ளடக்கி தமது தலைமைகளைப் பாதுகாக்க, பழைய தலைமைகள் செய்ததிலும் பார்க்க மிகவும் கேவலமான முறையில் இன்றும் இந்தத் தலைமைகள் தொடருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மறுபுறத்தில் தம்மை இடதுசாரி இயக்கங்கள் என்று அழைத்துக் கொண்ட இயக்கங்களின் வரலாறும் இப்படியாகவே அமைந்து விட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈறோஸ்., என்.எல்.எப்.ரி., புளொட் ஆகியவை மேற்கூறப்பட்டது போல ஸ்டாலின், மாவோ சித்தாந்தங்களை அடிபபடையாகக் கொண்டு தமது அரசியலைத் தீர்மானித்தது' பிற்காலத்தில் அவர்களை நிலைதளம்பச்செய்தது என்று கூறலாம். புளொட்டின் உட்கொலைகள் அந்த இயக்கத்தை உருக்குலைத்தது. ஆனால் இதன் தலைமையை வெறுத்து வெளியேறியவர்கள் இன்னும் அதே சித்தாந்தங்களையே கட்டிகாப்பது மறுபடியும் அவ்வாறான தலைமைகளையே உருவாக்குவார்கள் என்ற பயத்தையே ஏற்படுத்துகின்றது. உதாரணமாக புளொட் இயக்கத்திலிருந்து வெளியேறிய "தீப்பொறி" இயக்கத்தினரின் "அரசியலும் ராணுவமும்" என்ற பிரசுரத்தில் தனிககட்சியின் சர்வதிகாரத்தை ஆதரித்து எழுதுவது கவனிக்கத்தக்கது. "...அவர்களுக்கு (மக்களுக்கு) தெரியும் இப்போது எடுத்து வைக்கப்படும் அடியானது முதலாளித்துவ பாராளுமன்ற அர்த்தத்தில் மீண்டுவரமுடியாத அடியென்பது; சோவியத் யூனியனில் கடந்த 68 வருடங்களாகவும், சீனாவில் கடந்த 36 வருடங்களாகவும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒரே கட்சியே ஆட்சி அதிகாரத்தில் இருப்பதை அறிவார்கள். ஆகவே தமது வாக்குப்பலத்தால் கட்சியை மாற்ற முடியாத புதிய அமைப்பிற்கு செல்லு முன்பு அவ்வமைப்பு மிக உயர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகம் கொண்டது தான் என உறுதி செய்து கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு நியாயமாகவே எழும். இந்த சந்தேகத்தைத் தீர்த்தபின்பே மாற்றத்தைக் கொண்டுவர முனையும் தாபனத்தை நம்பி தமதும் தமது சந்ததியினதும் வருங்காலத்தை ஒப்படைக்கத் தயாராவர்...."[2]

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினர், நவஸ்டாலினிச வாதியான டயன் ஜயத்திலகாவுடனும் ( இன்று அவர் எங்கே?) மஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்ததினால் அவர்களுடைய சித்தாந்தப் பாதையும் இதுவாகவே இருந்தது. ஸ்டலினிச சகவாழ்வுக் கொள்கை அவர்களை இந்திய அரசிலும் ராணுவத்திலும் முற்றாக நம்பவைத்து இன்று தடம்புரள வைத்து விட்டது.

எனது நோக்கம் சகல இயக்கங்களையும் சாடுவதல்ல. கடந்தகால அரசியல் போக்குகள் யாவும் விமர்சனம், சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டும் என்பதே எனது அவா. இது போன்ற விவாதங்களே வருங்காலத்தில் தெளிவான அரசியல் வழிகாட்டலுக்கு உதவும்.

---

[1] சிறுபான்மை இனத்தவர்களுக்கு 50%மான பிரதிநிதித்துவம் வேண்டுமென கோரிக்கை விடுத்தவர் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம்!

[2] "அரசியலும் ராணுவமும்" தீப்பொறிவெளியீடு. ப22



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

advertisement


நீங்கள் வருந்தி உழைக்கும் பணத்தை வீண் விரயம் செய்யாது சேமிப்பதற்கு தேவையான சகல ஆலோசனைகளையும் வழங்குகின்றார் :

**Anthony Thevaraj**

**Repräsentant für die OVB.**

* நிலையான வைப்புக் கணக்குகள்.
* ஆயுட்கால காப்புறுதித்திட்டம்.
* தவணைமுறை வைப்புக் கணக்கு
* தொழில்புரிவோருக்கான பாதுகாப்புக் காப்புறுதி.

Anthony Thevaraj

Buro
Muhlhaldenweg 44
7310 Plochingen
Telefon 07153 2 10 90
Telefax 07153 7 11 88

Privat
Heslacher Wand 34
7000 Stuttgart 1
Telefon 07 11 6 49 12 46

# தாயகம்

உண்மையைத் தேடி

கனடாவிலிருந்து வெளிவரும் தமிழ் வார வெளியீடு.

வெளிநாடுகளுக்கு சந்தா விபரம்: ஆறு மாதங்களுக்கு $50.

தொடர்புகளுக்கு:

Editor: George R. Ckrhushchev
Georgicka Communications,
P.O.Box 1031, Station "F"
Toronto, Ont. M4Y 2T7.
CANADA
Tel: (416)920 9081 Fax: 963 5738

www.tamilarangam.net

(Continued from inside frontcover)
to establish their hegemony in certain parts of the Tamil areas. Their treachery today is far greater than that of the past Tamil leadership.

Hesitation of the past Tamil leadership to establish close relationships with the Upcountry and the Sinhala progressive forces, and their close relationship with the Sinhala ruling classes were understandable, considering their class nature. But the fact that the liberation moments that struggled with weapons and spoke progressive language too had taken the same path is the pathetic thing today. These leadership should realize that the rights of the Tamil people cannot be won with the weapons of the Srilankan government nor the with the patronage of the Indian government.

It is necessary for these leadership to realize that our real allies are the Upcountry and the Sinhala proletariat, and only through united actions with their organizations can definite struggles be conducted.

(Translated from TAMIL.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைந்ததேசத்தின் வரிகள்

என்ன?
ஒன்றுமே தெரியவில்லையே?
என் கண்களில் கோளாறா?
அல்லது
தொலைக்காட்சியின் கோளாறா?
இல்லை.
வெறும் கற்குவியல்கள்.
சாம்பல் நிறம்,
மனித உடல்கள்,
ஓலங்கள் மட்டுமே தெளிவாக....
இதுதான்
துயரம் நிறைந்த
எனது தேசத்தின்
இன்றைய அவலம்
உண்மையில் என்னதான் நடந்தது?
எனது தேசத்தின் நிறம் மாறியது.
மாகாண வித்தியாசமின்றி
மனித உடல்கள் குதறப்பட்டன,
ஒற்றுமையின்மையின் எதிரொலி
தேசமெங்கும் கேட்டது.
பொருளாதார புள்ளி விபரத்தில்
உச்சியில் தொங்குபவர்கள்
அந்நிய தேசங்களிலும்
அடியில் நெரிபவர்கள்
மரணத்தை நோக்கியும்

எரியும் தேசத்தின்
வெப்பம்
குளிர் நாட்டில் விறைத்த
என் இதயத்தில்
பட்டுத் தெறிக்கையில்
தற்காலிகமாக
தப்பிவிட்ட
என் மனதில்
குற்ற உணர்வு மேலோங்கும்.

ஆனால்-
தொடரும் துயர்கள் மறைந்து
மக்கள் சுதந்திர கீதமிசைப்பர்
என்ற என் கனவுடன்
சின்னஞ் சிறுதாய் ஓர் நம்பிக்கை
என் மனதில் வளரும்.

—பிரியதர்ஷினி.